பக்கங்கள்: 24

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 29 ஞாயிற்றுக்கிழமை 12.02.2023 கதிர் 96

**இனி இது ரகசியம் அல்ல!**

அரசியலில் நண்பனும் இல்லை பகைவனும் இல்லை என்கிற புகழ்பெற்ற சொற்றொடர் ஒன்றுண்டு. அதேபோல இப்போது அரசியலில் வாத்தியாரும் இல்லை மாணவனும் இல்லை என்கிற புதிய சொற்றொடரும் இனிப் புழக்கத்திற்கு ☞2

ஒற்றையாட்சி நாட்டில் சமஷ்டிக்கு இடமில்லை

# இலங்கையில் வாழ முடியாவிட்டால் இலண்டனுக்கு ஓட வேண்டும் விக்கி

## பொன்சேகா இப்படிப் பதில் கருத்து



இலங்கையில் வாழ முடியாவிட்டால் இங்கிலாந்தை நோக்கி ஓடச் சொல்லுங்கள் - என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் எம்.பிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா. ☞2

## ரணில் - விக்கி நேற்று தனியாகச் சந்திப்பு

### ஆளுநரின் ஏற்பாட்டில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.12

காங்கேசன்துறைக்கும் இந்தியாவின் காரைக்கால் துறைமுகத்துக்கும் கப்பல் சேவை நடாத்த அரசு தயாராகவுள்ளபோதும் அதற்கான முதலீட்டாளர் அல்லது வர்த்தகர் எவரும் முன்வரவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இந்த விடயத்தை அவர் தன்னிடம் நேரில் தெரிவித்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் காலைக்கதிர் பத்திரிகையிடம் தெரிவித்தார். ☞2

## தமிழர்களின் பிரச்சினை குறித்து ருவானுடன் பேசிய அண்ணாமலை



நான்கு நாள் பயணமாக இலங்கை வந்துள்ள பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் கே.அண்ணாமலைக்கும் ஜனாதிபதியின் கால நிலை மாற்றம் தொடர்பான ஆலோசகர் ருவான் விஜேவர்த்தனவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ☞2

## யானை – காக்கை – மொட்டு அரசை வீட்டுக்கு விரட்டியடித்தே தீருவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை





தமது ஆட்சிக்காலத்தை நீடிக்கப் பல்வேறு சதிகளை மேற்கொள்ளும் யானை – காக்கை – மொட்டு அரசை வீட்டுக்கு விரட்டியடித்தே தீர ☞2

## மீள்குடியமர்த்தப்படும் 197 குடும்பங்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள், கொடுப்பனவுகள்



வடக்கில் மீள்குடியமர்த்தப்படும் 197 குடும்பங்களுக்கான காணி உறுதிப் பத்திரங்கள் மற்றும் குடியமர்த்தப்படும் கொடுப்பனவாக தலா 38 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் காசோலைகள் என்பவற்றைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ☞2

## நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றால் அமைதியின்மை, அரசியல் நெருக்கடி ஏற்படும்

### அரசை எச்சரிக்கிறார் சரத் வீரசேகர



சர்வதேச நாணய நிதியத்தின் பொறிக்குள் இலங்கை சிக்குண்டுள்ளது. அது விதிக்கும் கடுமையான நிபந்தனைகளை முழுமையாக செயற்படுத்தினால் சமூக கட்டமைப்பில் அமைதியின்மை நிலவுவதுடன், அரசியல் நெருக்கடி தீவிரமடையும். ☞2

## ஆர்ப்பாட்டத்தில் கைது செய்யப்பட்ட அனைவரும் பிணையில் விடுவிப்பு



யாழ்ப்பாணம் மாநகரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்கேற்புடன் நடைபெற்ற சுதந்திர தின விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் உள்ளிட்ட 18 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை கைது செய்யப்பட்ட அனைவரும் இரவு 11 மணியளவில் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் ☞16

## காதலர் தினத்தில் கல்விக்கு விடுமுறை

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதியினுள் இயங்கி வரும் அனைத்து தனியார் கல்வி நிலையங்களுக்கும் காதலர் தினமான எதிர்வரும் 14ஆம் திகதி விடுமுறை வழங்குமாறு கல்முனை மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ. எம்.றகீப் கோரிக்கை விடுத்துள்ளார். ☞16

## மீண்டும் நில அதிர்வு

இலங்கையில் இன்று சனிக்கிழமை காலை மீண்டும் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. மொனராகல மாவட்டம் வெல்லவாயவில் இந்த அதிர்வு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதிகாலை 3.48 மணிக்கு ரிச்டர் ☞16

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும்.

ஜனாதிபதியின் யாழ்ப்பாண வருகையின்போது அவரைத் தனியாக இரகசியமாகச் சென்று சந்தித்துப் பேசியிருக்கிறார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன்.

அதற்கு அவர் கூறியிருக்கும் விளக்கம், ''தனியே போராட்டம் எதிர்ப்பு என அன்றி கோரிப் பெறக்கூடிய அனைத்தையும் பெற்று ம க்களிற்கு வழங்கும் முயற்சியாகவே ஜனாதிபதியைச் சந்தித்தேன்" என்பது. அது நல்ல நோக்கம்தான். அரசியல்வாதிக்கு இருக்கவேண்டிய பண்புதான்.

அதையே மற்றவர்கள் செய்யும்போது ரத்தக் கொதிப்பு வருவது ஏன் என்பதுதான் புரிவதில்லை. இதற்கு முன்னர் விக்னேஸ்வரனின் சட்ட மாணவனான எம்.ஏ.சுமந்திரனும் இப்படித்தான் கோரிப் பெறக்கூடிய அனைத்தையும் பெற்று மக்களுக்கு வழங்கும் நோக்கத்தோடு ரணிலுடன் நெருக்கமாகச் செயற்பட்டார். கிட்டத்தட்ட ரணிலின் நம்பிக்கைக்குரிய ஆலோசகர் என்கிற அளவில் செயற்பட்டார். அப்போது அவர் சிங்கள ஆட்சியாளர்களின் விசுவாசி, தமிழ் மக்களை அடகு வைத்துவிட்டார் என்று கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

நேற்று யாழ்ப்பாணக் கலாசார நிலையம் மக்களுக்கு உரித்தாக்கப்பட்ட நிகழ்வில் சுமந்திரனும் கலந்துகொண்டிருந்தார். ஆனால் ஓரமாக ஒதுங்கி நின்றுகொண்டிருந்தார். முன்னர் மாதிரி என்றால் ரணிலே அவரை அழைத்து அருகில் நிறுத்தி வைத்திருப்பார். இந்தத் தடவை அது மிஸ்ஸிங்

*****

ஜனாதிபதி நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தபோது ஊடகவியலாளர்கள் சிலர் சென்று யாழ்ப்பாண ஊடக அமையம் சார்பில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க ரணில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கை மனுவைக் கொடுத்தனர் என்று செய்திகள் வந்துள்ளன. நல்லதுதான், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்படுவது தேவையானதுதான். சக பத்திரிகையாளர்களின் குடும்பங்களைப் பற்றிச் சிந்திக்கவேண்டியதும் அவசியம்தான்.

அதேநேரம், காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் உதவிகள் தேவைப்படுகின்றன, அவையும் நிர்க்கதியான நிலையில் நிற்கின்றன, துன்பப்படுகின்றன, ஆனால் அந்தக் குடும்பங்கள் அரசிடம் இருந்து இழப்பீடு ஏதும் பெற்றுவிடக்கூடாது என்றும் எங்களுக்கு நீதிதான் வேண்டும் இழப்பீடு அல்ல என்றும் எழுப்பப்படும் அரசியல் குரல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும்போது அந்தக் குடும்பங்களும் பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் குடும்பங்களைப் போன்றவைதான் என்பதையும் மனதிலிருத்திக்கொண்டால் நன்றாக இருக்கும்.

*****

ரணிலுக்கு நல்ல ஆலோசனை ஒன்றைச் சொல்லியுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நடிகருமான ரஞ்சன் ராமநாயக்க. சிங்கப்பூர் நாட்டைக் கட்டியெழுப்பிய தந்தை என்று வர்ணிக்கப்படுபவரான லி குவான் யூ போன்று ரணில் செயற்பட வேண்டும் என்று அவர் கூறியிருக்கிறார். அதாவது சிங்கப்பூரில் தான் ஆட்சிக்கு வர உதவிய இரு பெரும் பாதாள உலகக் குழுக்களை, ஆட்சிக்கு வந்த கையோடு ஒன்றுமில்லாமலாக்கினார் லீ குவான் யூ. அதுதான் சிங்கப்பூரை அபிவிருத்தி அடைந்த நாடாக அவர் மாற்றுவதற்கான அடித்தளமாக இருந்தது. அதுபோன்றே, தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காகத் ரணிலை ஜனாதிபதியாக்கிய பல ஊழல், மோசடிக் குழுக்களை அவரும் ஒன்றுமில்லாமலாக்கவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். செய்வாரா, செய்வதை நினைத்துக்கூடப் பார்க்க முடியுமா ரணிலால்?

- இடிமின்னல் -

## இலங்கையில் வாழ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையானது ஒற்றையாட்சி நாடாகும். இங்கு சமஷ்டிக்கு இடமில்லை. இங்கு வாழ முடியாவிட்டால் விக்னேஸ்வரனை இங்கிலாந்து போகச் சொல்லுங்கள்.

விக்னேஸ்வரன் சிங்களப் பெண்ணையே திருமணம் முடித்துள்ளார். அவர்களின் பிள்ளைகளும் அப்படித்தான். விக்னேஸ்வரன் தெற்கில்தான் படித்தார். தொழில் செய்தார். தற்போது வடக்கு மக்களுக்காகக் குரல் கொடுப்பதுபோல் பாசாங்கு செய்கின்றார். அவர் சந்தர்ப்பவாதி – என்றார்.

சமஷ்டி தொடர்பிலும், மகாசங்கத்தினர் குறித்தும் சி.வி. விக்னேஸ்வரன் எம்.பி. வெளியிட்ட கருத்துக்கள் தெற்கு அரசியலில் பெரும் சொற்போரை ஏற்படுத்தியுள்ளது. பல தரப்பினரும் விக்கியை விமர்சித்து வருகின்றனர்.

## தமிழர்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளித்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தப் பாடுபடும் என்று கே.அண்ணாமலை இதன்போது குறிப்பிட்டார்.

இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் ருவான் விஜேவர்த்தனவுடன் அண்ணாமலை கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானும் கலந்துகொண்டார்.

## ரணில் - விக்கி நேற்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் 75ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்காக யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவை நேற்று மாலை ஜனாதிபதி தங்கியுள்ள விடுதியில் சென்று தனியே சந்தித்துப் பேசினார் விக்னேஸ்வரன்.

இச் சந்திப்புக் குறித்து அவருடன் தொடர்பு கொண்டு கேட்டது தெரிவித்த தாவது:

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவை தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடினேன். சந்திப்பின்போது எனது செயலாளரும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவும் உடனிருந்தனர்.

தீர்வு விடயத்தை முன்கொண்டு செல்ல கையாளும் வழிவகைகள், அது அமையக்கூடிய பொறிமுறை தொடர்பில் விவாதித்த அதேநேரம் படையினர் வசம் உள்ள நிலங்களை விடுவிப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தினேன்.

கீரிமலையில் உள்ள ஜனாதிபதி மாளிகையினை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா வடக்கு மாகாணசபைக்குஎடுக்குமாறு எனக்கும் சுமந்திரனிற்கும் முன்னாள் கூறிய போதும் அது இன்றுவரை கடற்படையினரின் பாவனையிலேயே உள்ளது, அதனைத் தரவேண்டும் என்றும் வலியுறுத்தினேன்.

அதேநேரம் வலி. வடக்கில் உள்ள தோட்ட நிலங்கள் விடுவிப்புத் தொடர்பிலும் கோரிக்கை வைத்தேன்.

கீரிமலையில் ஜனாதிபதி மாளிகையைச் சுற்றியுள்ள தனியார் நிலத்தை உரியவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார். மாளிகையினை சேர் பொன் இராமநாதன் பெயரல் மாகாண சுற்றுலாவிற்கு பயன்படும் வகையில் வழங்கலாம் எனக் கருதியுள்ளார் எனவும. அதற்கு உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தனியே போராட்டம், எதிர்ப்பு என அன்றி கோரிப் பெறக்கூடிய அனைத்தையும. பெற்று மக்களிற்கு வழங்கும் முயற்சியாகவே ஜனாதிபதியைச் சந்தித்தேன் என்றார்.

## இலங்கையில் வாழ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். பிறக்காத தலைமுறையும் கடனாளியாகாமல் இருக்க நாம் அனைவரும் இப்போதே ஒன்றிணைவோம்.

– இவ்வாறு அழைப்பு விடுத்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

வெலிமடையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வெலிமடை மரக்கறி விவசாயிகள் படும் இன்னல்களை நாட்டு மக்கள் உணர்ந்தாலும் யானை – காக்கை – மொட்டு அரசு அதனைச் சிறிதும் பொருட்படுத்துவதாகவே இல்லை.

இந்த அரசு தமது ஆட்சிக்காலத்தை நீடிக்கப் பல்வேறு சதிகளை மேற்கொள்கின்றது.

இவ்வாறு பல்வேறு சதிகளை மேற்கொண்டு எமது நாட்டின் வாழ்வாதாரத்தைச் சீரழித்து மக்களின் பணத்தை கொள்ளையடித்த அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

திருடர்களைப் பிடிப்பதோடு மாத்திரம் நின்றுவிடாது, திருடப்பட்ட பணத்தையும் நாட்டுக்கு கொண்டு வந்து பிறக்காத தலைமுறையாவது கடனாளியாகாமல் இருக்கட்டும். அதற்காக முடிந்த அனைத்தையும் செய்வோம் – என்றார்.

## மீள்குடியமர்த்தப்படும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய, யுத்தத்தின் போது பாதுகாப்புப் படையினரால் பயன்படுத்தப்பட்ட வடக்கில் உள்ள காணிகளை அதன் உரிமையாளர்களான பொதுமக்களிடம் மீள ஒப்படைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்தக் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் காணி உறுதிப் பத்திரங்கள் மற்றும் காசோலைகளைக் கையளிக்கும் அடையாள நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்றது.

கடந்த 33 ஆண்டுகளாக இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்த மக்கள் தமது காணிகள் மீளக் கிடைத்ததையிட்டு ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்தனர்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வடக்கு மாகாணத்துக்கான ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் எம். இளங்கோவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## நாணய நிதியத்தின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்தார் சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.

கொழும்பில் சனிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுஜன பெரமுன தலைமையிலான எமது ஆட்சி எடுத்த ஒருசில தீர்மானங்கள் பொருளாதார பாதிப்பை

(17ஆம் பக்கம் பார்க்க)




காலைக்கதிர் Kalaikkathir

'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு -077 307 8799

# துருக்கி மக்களுக்கு இலங்கை நன்கொடையாக தேயிலை



பூகம்பத்தால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள துருக்கி மக்களுக்கு உதவும் நோக்கில் உள்நாட்டு தேயிலை ஏற்றுமதியாளர்களின் அனுசரணையுடன் இலங்கை அரசாங்கம் தேயிலையை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த நன்கொடை வெளிவிவகார அமைச்சின் அவசர உதவிப்பிரிவின் பணிப்பாளர் நாயகம் ஓ.எல். அமீர் அஜ்வத்தினால் இலங்கைக்கான துருக்கி நாட்டுத்தூதுவர் டெமெற் செகெர்ஸியோக்லுவிடம் கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டது.

துருக்கி மக்களுக்கான இந்த உதவி வழங்கல் பிரதமர் அலுவலகம், வெளிவிவகார அமைச்சு மற்றும் இலங்கை தேயிலை சபை ஆகியவற்றால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இந்தக் கையளிப்பின்போது வெளிவிவகார அமைச்சின் ஐரோப்பிய பிராந்திய பணிப்பாளர் ப்ரியங்கிகா தர்மசேன, இலங்கை தேயிலை சபையின் தலைவர் நிராஜ் டி மெல் மற்றும் இலங்கை தேயிலை சபையின் மேம்பாட்டுப்பிரிவு பணிப்பாளர் பவித்ரி பீரிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.









காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தேவையற்ற அடக்குமுறைகள்

**தமிழ் மக்கள் தமது அரசியல் கருத்துக்களை எதிர்ப்புக்களை வெளிப்படுத்துகின்றபோது அவற்றைக் காவல்துறையின் அதிகாரத்தைக்கொண்டு அடக்கி ஒடுக்கி வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டதன் பயனாகத்தான் இலங்கை மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஒரு உள்நாட்டுப் போரை எதிர்கொள்ளவேண்டி இருந்தது. இந்த வரலாற்றை யாரும் மறந்தவிடமுடியாது; கூடாது.**

**யாழ்ப்பாண நகரப்பகுதியில் பொலிஸார் நேற்று நடந்துகொண்ட முறை வரலாறு மீண்டும் திரும்புகின்றதோ என்கிற அச்சத்தை ஏற்படுத்தியது. அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவர் நடத்திய சுதந்திர தின விழாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைப் பொலிஸார் ஒடுக்கிய விதம் மீண்டும் அச்சத்தை ஏற்படுத்துகின்றது.**

**அந்தப் போராட்டம் அச்சுறுத்தலைத் தரக்கூடியதாகவே வன்முறையை நிகழ்த்தக்கூடியதாகவோ இருக்கவில்லை. சுமார் நூறுபேர் வரையிலானோரே அதில் பங்கேற்றிருந்தனர். ஒப்பீடளவில் அதுவொரு சிறி எண்ணிக்கை. அதிலொருவர் நாடாளுமன்ற உறுப்பினர். போராட்டத்தை நடத்திய கூட்டம் எந்த வகையிலும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் நடந்துகொள்ளவில்லை. அவர்கள் அமைதியான வழியிலேயே அங்கே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.**

**இருப்பினும் பொலிஸார் முரட்டுத்தனமாக நடந்துகொண்டு ஆர்ப்பாட்டக்காரர்களை அடித்து விரட்டியும் கைது செய்தும் வன்முறையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள்தான் வரலாற்றில் தமிழர்களையும் பதில் வன்முறையை நோக்கி, இளைஞர்களை ஆயுதப் போராட்டத்தை நோக்கி உந்தித் தள்ளியது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.**

**1956 சத்தியாக் கிரகப் போராட்டம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் என்றும் மறக்கப்பட முடியாத கறுப்புப்புள்ளி. காலி முகத் திடலில் சத்தியாக்கிரகம் நடத்திக்கொண்டிருந்த அப்பாவித் தமிழ் மக்களையும் அரசியல் தலைவர்களையும் காவல்துறையின் வன்முறையைப் பயன்படுத்திக் கலைத்தது அன்றைய ஆட்சி. அப்போது முதல் மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்பட்டு வந்த அரச வன்முறையின் விளைவாகத்தான் ஆயுதப் போராட்டம் கிளர்ந்தது. தமிழ் மக்கள் மத்தியில் அது ஊட்டி வளர்க்கப்பட்டும் வந்தது. அதற்குக் காரணம் அரச வன்முறை ஏற்படுத்திய வலிகள்.**

**இப்போது மீண்டும் அத்தகைய அமைதி வழியிலான போராட்டங்கள் மீது நிகழ்த்தப்படும் அரச வன்முறையைப் பார்க்கும்போது வரலாறு மீள நிகழ்கிறதோ என்கிற அச்சம் ஏற்படுகின்றது. நேற்றைய போராட்டம் எந்தவித அச்சுறுத்தலையும் கொண்டிருக்காதபோதும் அது வன்முறை ரீயில் கலைக்கப்பட்டது கண்டிக்கத்தக்கது. அங்கே ஆர்ப்பாட்டத்தில் கூடியிருந்தவர்களைவிட அதிக எண்ணிக்கையில் காவல்துறையினரும் சிறப்பு அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர். அத்தகையதொரு நிலையில் வன்முறையும் கைதும் தேவையற்றவையாக இருந்தன. ஆனாலும் வன்முறை நிகழ்த்தப்பட்டது, கைதுகள் இடம்பெற்றன.**

**ஆட்சித் தலைவர்கள் உண்மையில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரும்பினால் அரசியலில் மாற்றுக் கருத்துகளைச் செவிமடுப்பதுடன் அமைதியான போராட்டங்களுக்கு மதிப்பளிப்பதும் அவசியம். வன்முறைகள் பதில் வன்முகளையே வளர்த்தெடுக்கும் என்பதை வரலாற்றிலிருந்து பாடமாகக் கற்றக அவர்கள் மறக்கக்கூடாது.**

# நாட்டின் சுதந்திரதினம் என்று கூறிக்கொண்டு அடிப்படை உரிமைகளைப் பறிக்கிறது அரசு

## மனித உரிமை, பொது அமைப்புகள் கண்டனம்

சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதாகக் கூறிக்கொண்டு நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை தற்போதைய ஆட்சி பறிக்கின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளன மனித உரிமை அமைப்புகள்.

ஆட்சியாளர்களின் தற்போதைய அடக்குமுறைகள், நாடு முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிகளைதீர்ப்பதற்குப்பதிலாகஅவற்றை மேலும் தீவிரமாக்கும் என்று 40 மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களும், 89 தனிநபர்களும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளுக்கு மத்தியில் நாட்டு மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டுமெனவும் அந்த அறிக்கை அழைப்பு விடுத்துள்ளது.

சமூகம் மற்றும் சமயத்துக்கான நிலையம், இலங்கை ஆசிரியர் சங்கம், காணாமல் போனோர் குடும்ப ஒன்றியம், மனித உரிமைகள் அலுவலகம், சட்ட மற்றும் சமூக நிதியம், மக்களுக்கான சட்டத்தரணிகள் பேரவை உள்ளிட்ட 40 மனித உரிமைகள் மற்றும் பொது அமைப்புக்களுடன் 89 தனிநபர்களும் இந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தற்போது நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருப்பதுடன் நாட்டு மக்களின் வாழ்வதற்கான உரிமையும் மீறப்பட்டு வருகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் அரசு பெருந்தொகை நிதியைத் செலவிட்டு 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தி சமூக செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கங்கள், தொழில் வல்லுநர்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களால் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகத்தின் மீது வன்முறைக் குழுக்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான தாக்குதலை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

குறிப்பாக, அரசாங்கத்தின் 'சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்வுகள்' இடம்பெறும் நாளில் ஆர்ப்பட்டங்கள் மற்றும் பேரணிகளை நடத்துவது குறித்து நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட உத்தரவுக்கமைய, எவ்வித குழப்பங்களோ அல்லது பொது மக்களுக்கான இடையூறுகளோ இன்றி முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரக போராட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் ஊடாக அமைதியாக ஒன்றுகூடுவதற்கும், எதிர்ப்பு தெரிவிப்பதற்கும் நாட்டு மக்கள் கொண்டிருக்கும் உரிமை எந்தளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

அதுமாத்திரமன்றி, இத்தாக்குதல்களின் போது கைதுசெய்யப்பட்ட சமூக செயற்பாட்டாளர்களின் மருத்துவ மற்றும் சட்ட உதவியை பெறுவதற்கான உரிமை மறுக்கப்பட்டதன் ஊடாக அவர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது.

நாட்டின் சுதந்திரம் என்பது அந்நாட்டு மக்கள் தமது அடிப்படை உரிமைகளை அனுபவித்து, கௌரவமான குடிமக்களாக வாழ்வதற்குக் கொண்டிருக்கும் உரிமையிலேயே தங்கியிருக்கிறது. ஆனால், தற்போதைய அரசு சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதாகக் கூறிக்கொண்டு நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கிறது.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக தற்போது நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

பொருட்களின் விலையேற்றம் மற்றும் வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கான பற்றாக்குறை, வேலையிழப்பு, வரிச்சுமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் நாட்டின் பெரும்பான்மை மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்துகொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நீண்ட காலப் போர் மற்றும் இனவாத அரசியலால் ஒடுக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் சமூகங்களும், பெருந்தோட்ட தொழிலாளர்கள் உள்ளிட்ட மலையக மக்களும், மேலும் பலருக்கு, கிடைத்ததாக கூறப்படும் 'சுதந்திரத்தின்' பின்னரும் தமக்குரிய அடிப்படை உரிமைகள்கூட பூர்த்தி செய்யப்படாமல் துன்பப்பட்டு வருகின்றனர்.

நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்று, 75 ஆண்டுகள் நிறைவடையும் இத்தருணத்தில் நாட்டு மக்கள் முகங்கொடுத்துவரும் இப்பிரச்சினைகளை தீர்ப்பது குறித்து கவனம் செலுத்தாமல், அவை தொடர்பில் குரல் கொடுக்கும் மக்களை தொடர்ச்சியாக ஒடுக்க முயல்வது கவலைக்குரிய விடயமாகும்.

முன்னைய அரசாங்கங்கள் கடைபிடித்த தன்னிச்சையான, தான்தோன்றித்தனமான கொள்கைகளும் அடக்குமுறை நடவடிக்கைகளுமே நாடு தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகளுக்கு பிரதான காரணம் என்பதை நாம் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

எனவே, அரசாங்கத்தின் தற்போதைய அடக்குமுறைகள் இந்த நெருக்கடிகளை தீர்ப்பதற்கு பதிலாக மேலும் தீவிரமாக்கும் என்பதை சுட்டிக்காட்டுகின்றோம்.

அமைதியான முறையில் ஒன்றுகூடுதல், அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்தல் என்பன இலங்கையின் அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளாகும்.


ஆனால், இந்த அரசாங்கம் தான்தோன்றித்தனமான முறையில் அந்த உரிமையை மீறுகின்றது. ஆகவே, நாட்டு மக்களின் வாழ்வதற்கான உரிமை உள்ளடங்கலாக அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காக தீர்க்கமாக தலையிடுமாறு சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் நாட்டு மக்கள் அனைவரிடமும் வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குமாரபுர தமிழ் மக்கள் படுகொலை இடம்பெற்று நேற்றோடு 27 ஆண்டுகள்!

1996 ஆம் ஆண்டு, திருகோணமலை குமாரபுரத்தில் தமிழ் மக்கள் மீதான படுகொலை இடம்பெற்று நேற்றோடு 27 ஆண்டுகளாகின்றன.

வீடுகளுக்குள் புகுந்த இராணுவத்தினர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிசூட்டில் சிறுவர்கள், பெண்கள் உட்பட அப்பாவி மக்கள் 26 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு 20 வருடங்களாக இடம்பெற்றுவந்த நிலையில், 2016 ஆம் ஆண்டு குற்றம்சாட்டப்பட்ட இராணுவத்தினர் அனைவரும் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தின் சிங்கள ஜூரிகள் கொண்ட சபையால் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.



இத்தனைக்கும் படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை அடையாளம் காட்டியிருந்த போதும் அவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

தற்போது நல்லிணக்க முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் காலத்திலேயே இந்தப் படுகொலை அரங்கேறியமை குறிப்பிடத்தக்கது.

## தந்தை, மகள் பரிதாபச் சாவு

வாகன விபத்தில் தந்தையும் மகளும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் இன்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கட்டுகஸ்தோட்டை – ஜம்புகஹபிட்டிய வீதியில் தந்தையும் மகளும் நடந்து சென்று கொண்டிருந்த வேளை வான் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

பொல்கொல்ல பிரதேசத்தை சேர்ந்த 47 வயதுடைய குடும்பஸ்தரும், அவரது 14 வயது மகளும் விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

# தமிழர் பிரச்சினையை காலம் தாழ்த்தாது தீர்த்து வைக்கவேண்டும் இந்தியா

## இந்திய அமைச்சரிடம் இந்துத் தலைவர்கள் வலியுறுத்து

இலங்கை தமிழர்களின் பிரச்சினைகளை இந்தியா இனியும் காலம் தாழ்த்தாமல் தீர்த்து வைக்கவேண்டும்என யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இந்திய இணை அமைச்சர் எல்.முருகனிடமும் ஆளும் பாரதிய ஜனதாக்கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் கு.அண்ணாமலையிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர் இந்துமதத் தலைவர்கள்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்யாரும், அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உபதலைவர் ஆறு. திருமுருகனும், இந்தக்கருத்தை வலியுறுத்தினர்.

சனிக்கிழமை நல்லை ஆதீனத்தில் இந்தியக் குழுவினரைச் சந்தித்துப் பேசியபோது அவர்கள் இதனை வலியுறுத்தினர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக நல்லை ஆதீன முதல்வரும் ஆறுதிருமுருகனும் தெரிவித்ததாவது:

இலங்கையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இதுதான் சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தை இந்திய அரசு பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

இலங்கையில் உள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்திய ஆட்சியாளர்கள் காலத்துக்குக் காலம் பல முயற்சிகள் எடுத்துள்ளனர். அந்த முயற்சிகள் தோல்வியில் தான் முடிவடைந்துள்ளன.

தற்போது ஏற்பட்டுள்ள சூழலை முறையாகப் பயன்படுத்தி இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கவேண்டும்.

தமிழ் மக்கள் அனைத்து உரிமையுடன் வாழ்வதற்கு ஒரு தீர்வினை கண்டு, அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ள இந்திய அரசு முயற்சி எடுக்கவேண்டும்.

இந்திய அரசின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் கலாசார மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலாசார நிலையம் யாழ்ப்பாண மக்களுக்குரியது. யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தை வளர்ப்பதற்கு யாழ் மக்களிடம் தான் அதனை ஒப்படைக்க வேண்டும்.

திருகோணேஸ்வரத்தின் புனிதத் தன்மையை பாதுகாப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என தாம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்று தெரிவித்தனர்.


**Jaffna College Institute of Technology**

**பின்வரும் பாடநெறிகள் Feb. மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட உள்ளன.**

**1. Computer Certificate Courses ( 3 – 4 months Part time)**
- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (Page Maker, Photo Shop & CorelDraw)
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**2. Civil Draftsperson ( one year )**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
Course leads to:
*Follow courses in level 5

**3. FIT - pre degree Programme for University of Colombo IT degree.**
Qualification GCE(O/L)

**4. Certificate in Craft Courses (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)**
- குளிரூட்டுதல் பயிற்சி நெறி -Refrigeration & Air-Conditioning Mechanic
- அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்- NVQ Level -3 (Accredited) –Aluminum Fabricator
- மின்னியலாளர் (Certificate in Electrician)- NVQ பாடத்திட்டத்தை தழுவியது

Our Civil Draftsperson & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too
மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.
(TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Library & Sports
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க
**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai. Tel. no: 0212250975 / 0212223382.**


# வெளிநாட்டு வருமான அதிகரிப்பு நம்பிக்கையைத் தருகின்றதாம்!

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவிப்பு



வெளிநாடுகளில் உள்ள இலங்கை பணியாளர்கள் அனுப்பும் பணத்தின் அதிகரிப்பு நம்பிக்கையை தருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஒப்பீட்டளவில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு இலங்கையின் மீட்சிக்கான பாதையில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை பணியாளர்கள் இந்த நாட்டுக்கு அனுப்பிய பணம் 437.5 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வலம்புரிச் சங்கை விற்பனைசெய்ய முயன்ற இருவர் ஹற்றனில் கைது!

விற்பனைக்கு தயாராக இருந்த 6 கோடி ரூபா பெறுமதியான வலம்புரி சங்குடன் சந்தேக நபர்கள் இருவர் நுவரெலியா பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலொன்றின் அடிப்படையில், தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், ஹற்றன் – கொழும்பு வீதியில் வசிக்கும் சந்தேக நபர், வலம்புரி சங்கை 6 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்றபோது அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து வலம்புரி சங்கு கைப்பற்றப்பட்டதையடுத்து, கைதான இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக ஹற்றன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் ஹற்றன் மற்றும் நுவரெலியா பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், பிரதான சந்தேக நபரின் வீட்டிலேயே வலம்புரி சங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்தது எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.


சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
Reg.No:DS882
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706
உரிமையாளரின் தொடர்புக்கு: 0777 226 247/ 077 614 0361



கிளை நிறுவனங்கள்
மல்லாகம் T.P: 021 224 3393 070 301 3014 077 343 6622
பண்டத்தரிப்பு T.P: 021 225 2333 071 255 4135 077 434 3798
சங்கானை T.P: 021 225 166 070 301 301 077 434 314
சாவகச்சேரி T.P: 021 227 0616 071 577 0616 077 435 3995
காரைநகர் T.P: 021 225 2454 070 510 2484
நெல்லியடி T.P: 021 226 09 071 755 09 077 261 24
யாழ் மத்தி (Town) T.P: 021 222 8004 070 301 5004 070 301 3017 077 998 6247
புன்னாலைக்கட்டுவன் T.P: 021 224 5001 076 384 0684 077 934 6509
வேலணை T.P: 021 221 547 070 301 30
email:- sasikadrivingschool@gmail.com
web:- sasikalearners.com


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM PER CHARGE*
FAAST-F2T
80-85 KM PER CHARGE*
FREEDOM
70-75 KM PER CHARGE*
Rs.550,000/- Upwards
Available Colors :
conditions apply*
India's fastest growing EV brand
2 YEARS WARRANTY*
3 FREE SERVICE*
*Range varies from mode to mode selected.
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

Since 2014

# அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

சூரியன், செவ்வாய் இணைந்தவை

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25027 |சை.பி| 1970**
வல்வெட்டித்துறை |இந்து
Machine Operater|Australia
பூரட்டாதி (கும்பம்)
166 செ.மீ | சூ,செவ் : 7

**24928 | வே | 1976**
இணுவில் |இந்து
Teacher(Graduate)|இலங்கை
உத்தரம் (கன்னி)
172 செ.மீ | சூ,செவ் : 4

**25468 | வே | 1976**
உரும்பிராய் | இந்து
Research Eng |சூ,செவ் : 3
பூரட்டாதி (கும்பம்) |கனடா
167 செ.மீ | Divorced

**24841 | தே | 1981**
வவுனியா| இந்து
Fire Fighting Officer
சுவாதி (துலாம்) | இலங்கை
175 செ.மீ | சூ,செவ் : 4

**25536 | கு | 1983**
முல்லைத்தீவு |இந்து
Driver | கட்டார்
திருவோணம் (மகரம்)
173 செ.மீ | சூ,செவ் : 12

**25126 | வே | 1985**
சுழிபுரம் |இந்து
QS | ஓமன்
உத்தரம் (கன்னி)
172 செ.மீ | சூ,செவ் : 12

**25519 | வே | 1987**
காரைநகர் |இந்து
Drafting Manager | Australia
ரோகிணி (இடபம்)
175 செ.மீ | சூ,செவ் : 9

**24850 | வே | 1987**
வடலியடைப்பு |இந்து
Factory Worker | சுவிஸ்
சதயம் (கும்பம்)
170 செ.மீ | சூ,செவ் : 5

**24652 | வி | 1987**
சாவகச்சேரி |இந்து
QS | இலங்கை
கார்த்திகை (இடபம்)
175 செ.மீ | சூ,செவ் : 8

**25479 | வே | 1989**
யாழ்ப்பாணம் |இந்து
Technical Officer|இலங்கை
ஆயில்யம் (கடகம்)
170 செ.மீ | சூ,செவ் : 9

**24985 | வே | 1989**
காரைநகர் |இந்து
Executive Officer|இலங்கை
விசாகம் (துலாம்) |சூ,செவ் 11
154 செ.மீ | Divorced

**25547 | வே | 1989**
கிளிநொச்சி |இந்து
Staff | அவுஸ்திரேலியா
மூலம் (தனுசு)
173 செ.மீ | சூ,செவ் : 10

**24790 | வே | 1989**
உடுவில் |இந்து
Business | இலண்டன்
அத்தம் (கன்னி)
180 செ.மீ | சூ,செவ் : 3

**25102 | வே | 1989**
வேலணை | இந்து
Realtor & Insurance Executive
பூராடம் (தனுசு)| இலங்கை
170 செ.மீ | சூ,செவ் : 3

**25542 | வே | 1991**
புத்தூர் |இந்து
Staff | இலண்டன்
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | சூ,செவ் : 5

**25575|வே+கோ|1991**
சாவகச்சேரி | இந்து
Photography | இலங்கை
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | சூ,செவ் : 5

**17063 | வே | 1991**
வடலியடைப்பு |இந்து
Accountant | இலங்கை
பூரட்டாதி (கும்பம்)
170 செ.மீ | சூ,செவ் : 8

**24967 | வே | 1993**
மட்டக்களப்பு |இந்து
IT/AV Technician | ஓமன்
அஸ்வினி (மேடம்)
160 செ.மீ | சூ,செவ் : 7

**25411 | வே | 1993**
திருகோணமலை |இந்து
Agriculture Society|சூ,செவ்11
புனர்பூசம் (மிதுனம்)
165 செ.மீ | இலங்கை

**25406 | வே | 1994**
முல்லைத்தீவு |இந்து
Self Employed | இலண்டன்
மூலம் (தனுசு)
178 செ.மீ | சூ,செவ் : 5

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25433 | வே | 1987**
வண்ணார்பண்ணை |இந்து
Teacher | இலங்கை
அத்தம் (கன்னி)
168 செ.மீ | சூ,செவ் : 12

**25541 | வே | 1989**
மாவிட்டபுரம் |இந்து
Teacher | நோர்வே
மூலம் (தனுசு) | சூ,செவ் : 11
144 செ.மீ | Divorced

**23791 | வே | 1991**
யாழ்ப்பாணம் |இந்து
KYC Analyst | சூ,செவ் : 12
ரேவதி (மீனம்)|நெதர்லாந்து
163 செ.மீ | Divorced

**23653 | வே | 1991**
நல்லூர் |இந்து
Medical Doctor | நோர்வே
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சூ,செவ் : 6

**25114 | வே | 1991**
நல்லூர் | இந்து
Software Eng | இலங்கை
ரோகிணி (இடபம்)
155 செ.மீ | சூ,செவ் : 10

**23638 | வே | 1993**
கொழும்பு |இந்து
Doctor | இலங்கை
பூரட்டாதி (மீனம்)
171 செ.மீ | சூ,செவ் : 10

**25293 | வே | 1994**
முல்லைத்தீவு | கிறிஸ்தவம்
Dev. Officer|Venezulela
ரேவதி (மீனம்)
160 செ.மீ | சூ,செவ் : 6

**23632 | தே | 1994**
வவுனியா |இந்து
Software Engineer
பூரம் (சிம்மம்) | இலங்கை
163 செ.மீ | சூ,செவ் : 10

**25343 | வே | 1994**
சங்கானை | இந்து
Student | இலங்கை
ரேவதி (மீனம்)
157 செ.மீ | சூ,செவ் : 2

**25257 |இ.வே| 1994**
காரைநகர் |இந்து
இலங்கை
ஆயில்யம் (கடகம்)
165 செ.மீ | சூ,செவ் : 6

**25208 | கோ | 1996**
பருத்தித்துறை | இந்து
Management Service Officer
மூலம் (தனுசு) | இலங்கை
160 செ.மீ | சூ,செவ் : 2

**25397|சோ.வே|1996**
கொழும்பு |இந்து
Internal Auditor| இலங்கை
ஆயில்யம் (கடகம்)
164 செ.மீ | சூ,செவ் : 3

**23710 | வே | 1996**
நெல்லியடி |இந்து
IT Staff | இலங்கை
திருவோணம் (மகரம்)
151 செ.மீ | சூ,செவ் : 6

**24025 | வே | 1996**
வவுனியா | இந்து
Graduate Trainee|இலங்கை
திருவாதிரை (மிதுனம்)
153 செ.மீ | சூ,செவ் : 1

**25515 | வே | 1996**
காரைநகர் |இந்து
Associate Software Eng.
சதயம் (கும்பம்) | இலங்கை
158 செ.மீ | சூ,செவ் : 10

**23965 | வே | 1996**
மானிப்பாய் |இந்து
Business Analyst (IT)
சுவாதி (துலாம்) | இலங்கை
149 செ.மீ | சூ,செவ் : 7

**25464|வே+கோ|1996**
நீர்வேலி |இந்து
இலங்கை
திருவோணம் (மகரம்)
173 செ.மீ | சூ,செவ் : 11

**25159 | ப | 1998**
நெல்லியடி | இந்து
Maths Teacher |இலங்கை
மகம் (சிம்மம்)
158 செ.மீ | சூ,செவ் : 7

**25421 | வே | 2000**
வவுனியா |இந்து
இலங்கை
உத்தரம் (கன்னி)
155 செ.மீ | சூ,செவ் : 7

**25390 | வே | 2000**
முல்லைத்தீவு |இந்து
Finance Assitant |இலங்கை
சதயம் (கும்பம்)
161 செ.மீ | சூ,செவ் : 6

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 12th of febuary 2023

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

## *Read the following passage and Answer: the question that follows.*

An owl is a bird. There are two basic types of owls: typical owls and bam owls. Owls live in almost every country of the world. Owls are mostly nocturnal, meaning they are awake at night. Owls are predators—they hunt the food that they eat. Owls hunt for mice and other small mammals, insects and even fish. Owls are well adapted for hunting. Their soft, fluffy feathers make their flight nearly silent. They have very good hearing which helps them to hunt well in the darkness. The sharp hooked beaks and claws of the owl makes it very easy to tear apart their prey quickly, although owls also eat some prey whole.

Owl's eyes are unusual. Like most predators, both the eyes of the owl face front. The owl cannot move its eyes. Owls are far—sighted, which means they can see very well far away.......... but they can't see dose very well at all. Fortunately, their distant vision is what they use for hunting and they can see far away even in low light. Owls have facial disks around their eyes, tufts of feathers in a circle around each eye. These facial disks are thought to help the Owl's hearing. Owls can turn their heads 180 degrees. This makes it look like they might be able to turn their heads all the way around, but 180 degrees is all the owl needs to see what's going on all around its. Perhaps because of the Owl's mysterious appearance, especially its round eyes and flexible neck, there are a lot of myths and superstitions about owls. Many cultures believe that owls are unusually wise. Because owls are nocturnal, some cultures associate owls with bad omens. The screech of the bam owl is considered by many to sound eerily human, like a person screaming. However, owls probably do not interact with the fates of humans at all. In fact, some owl species may become extinct because of humans.

Answer the following questions by selecting the most appropriate option:

**1. Which of the following is not true about owls ?**

(a) Owls eat small animals



(b) Owls are able to fly silently

(c) Owls have the best hearing of all birds

(d) Owls have poor vision

**2. The eyesight of the owl is used for.................**

(a) flying (b) hunting

(c) sleeping (d) none of these

**3. The purpose of this short article is................**

(a) to entertain (b) to inform

(c) to persuade (d)none of these

**4. Title for this story can be..............**

(a) Owls hunt at night (b) Owls can fly silently

(c) Owls are interesting animals (d) Owls have flexible necks

**5. Which of the following is true ?.**


(a) The facial disks of the owl help them to see.

(b) Owls have a strong, bent beak.

(c) Most owls hunt for food during the day.

(d) Owls are dangerous to humans.

## *Read the following passage and Answer: the question that follows.*



For the mobility—impaired, highly trained canines called 'service dogs' can pick up dropped keys, open and close drawers, retrieve prepared meals, help a person in and out of bathtub, dial 911, push and pull wheelchairs, help operate a car or van and pull off gloves, shoes, socks and jackets. Other dogs provide specific assistance to those who suffer seizures (sudden attacks of illness) and require special medication. And, of course, the helping dogs provide companionship, play and give unconditional love to the people they assist.

It is thirty odd years now since the placement of the first assistance dog. But only in recent years, with the rising independent movement among disabled people has the idea begun to spread widely.

While most service-dogs are trained to work with people who rely on wheelchairs, other categories of helping dogs include hearing-dogs who alert their owners to sounds, such as doorbells, phones, cooking timers, alarm clocks, smoke alarms and seizure dogs which carry medication in their packs and are trained to dial 911 on large keypad phones.

**1. The service-dogs were:**

(a) paid highly (b) less in number

(c) multiple taskers (d) employees

**2. The idea of assistance dogs became popular due to the:**

(a) independent movement among the disabled

(b) awareness by the hospitals (c) independence of the country

(d) both (a) and (c)

**3. The categories of helping-dogs are:**

(a) domestic dogs, service dogs & seizure dogs

(b) service, hearing and seizure dogs

(c) hunting and domestic dogs

(d) None of the above

**4. There is a difference between:**

(a) the service dogs and the helping dogs

(b) the serving dogs and canines

(c) the canines and ordinary dogs

(d) both (b) and (c) .

# Read the following passage and Answer: the question that follows.



Be like a flower. One must try to become like a flower: open, frank, equal, generous and kind. So you know what it means ?

A flower is open to all that surrounds it: nature, light, the rays of the sun, the wind etc. It exerts a spontaneous influence on all that is around it. It radiates joy and beauty.

It is frank. It hides nothing of its beauty and lets its fragrance flow frankly out of itself. What is within and what is in its depths, it lets it come out so that everyone can see it.

It is equal: it has no preferences. Everyone can enjoy its beauty and its perfume without rivalry. It is equal and the same for everybody. There is no difference, or anything whatsoever.

Then generous without reserve or restriction, it gives away the mysterious beauty and the very own perfume of Nature. It sacrifices itself entirely for our pleasure, even its life it sacrifices to express this beauty and the secret of the things gathered within itself.

And then, kind: it has such a tenderness, it is so sweet, so close to us, so loving. Its presence fills us with joy. It is always cheerful and happy.

Happy is he who can exchange his qualities with the real qualities of the flowers. Try to cultivate in yourself their refined qualities.

**1. A flower is compared…………..**

(a) with all living things
(b) with human beings
(c) with girls
(d) with a child

**2. A flower is open to all because…………**

(a) it influences all (b) it radiates joy
(c) it spreads its beauty to all (d) all of these

**3. The refined qualities of a flower are,**

(a) fragrance and beauty (b) generosity and kindness
(c) equality and attractiveness (d) frankness and honesty

**4. The writer talks about…………**

(a) rose flower (b) lotus flower
(c) lily flower (d) all flowers

5. A spontaneous influence means……….

(a) a slow influence (b) a quicker influence
(c) naturally created influence (d) a casual influence

---

This is a great lesson for all of us to learn, that in all matters the two extremes are alike. The extreme positive and the extreme negative are always similar. When the vibrations of light are too slow we do not see them, nor do we see them when they are too rapid. So with sound; when very low in pitch we do not hear it, when very high we do not hear it either. Of like nature is the difference between resistance and non-resistance. One man does not resist because he is weak, lazy and cannot; because he will not; the other man knows that he can strike an irresistible blow if he likes; yet he not only does not strike, but blesses his enemies. The one who from weakness resists not commits a sin, and as such cannot receive any benefit from the non-resistance, while the other would commit a sin by offering resistance. —Swami Vivekananda.

**1. "… in all matters two extremes are alike", means:**

(a) Powerful men always gain success
(b) All human beings are of same characters
(c) Boys and girls are equally talented
(d) The extreme positive and the extreme negative are alike

**2. When the sound is in low pitch:**

(a) we fail to hear it
(b) we can hear it easily
(c) it pleases us
(d) we feel dizzy

**3. Too rapid vibrations of light:**

(a) can be easily seen
(b) cannot be seen
(c) should be enjoyed
(d) both (b) and (c) are correct

**4. The one who resists is different from a man who does not resist, because of his:**

(a) nature (b) weakness
(c) strength (d) laziness

5. The word 'irresistible' mean:

(a) tied so closely that it cannot be separated
(b) so strong that it cannot be stopped



(c) that cannot be changed back
(d) so valuable that it cannot be replaced

# Quake Science: Is Delhi due for a really big one?

The Bureau of India Standards has classified the country into four major zones based on the macro seismic zoning map of India — Zone V (high intensity) to Zone II (low intensity). Parts of Delhi and northern Uttar Pradesh fall in Zone IV, which is the severe category

On Tuesday afternoon, Delhi and its surrounding areas witnessed strong tremors after a 5.8-magnitude earthquake rocked Nepal.

Residents said the tremors lasted over 30 seconds, leaving ceiling fans swaying and household objects teetering.

The earthquake, with its epicentre in the Mela area of Bajura district in Sudurpaschim province, hit the region at 2:43 pm local time, Lokvijaya Adhikari, head of the Earthquake Measurement Centre, was quoted as saying by Ekantipur news portal.

There was no immediate report of damage to life or property.

The quake comes just a month after three tremors jolted Western Nepal in quick succession and two months after the National Capital and the surrounding areas witnessed tremors around 2 am after a 6.3 magnitude earthquake struck Nepal.

The tremors, which lasted for around 10 seconds, prompted many to rush out of their houses.

The tremors were also felt in Gurugram, Noida, and other parts of Uttar Pradesh. Hours later, a temblor struck Uttarakhand's Pithoragarh.

While there were no casualties reported in India, six people lost their lives in Nepal's Doti district.

This isn't the first time residents of Delhi-NCR region have had to deal with such experiences.

The National Seismological Network detected 745 earthquakes between September 2017 and August 2020 including 26 of magnitude three and above on the Richter scale in the National Capital Region (NCR) with

In 2021, the Delhi-NCR region experienced tremors on at least five occasions after being hit by low-intensity quakes or because of aftershocks.

Quake Science Is Delhi due for a really big one

Delhi is 'severe' seismic zone

The Capital and its surrounding cities fall in the high-risk seismic zone. The Bureau of India Standards has classified the country into four major zones based on the macro seismic zoning map of India — Zone V (high intensity) to Zone II (low intensity).

Parts of Delhi and northern Uttar Pradesh fall in Zone IV, which is the severe category. Gujarat's Bhuj, which was struck by a massive earthquake in 2001 in which 20,000 people were killed, Chandigarh, Ambala, Amritsar, Ludhiana and Roorkee all fall under zones IV and V, reports The Economic Times.

Gurugram is on seven fault lines, making it the riskiest area in Delhi NCR. If these become active, it can cause a quake of 7.5 magnitude, the report says.

According to professor Chandon Ghose of IIT-Jammu, an expert on earthquake engineering, earthquake centres are changing to



changes in the environment. There is a change in tectonic plates. "Delhi is close to the Himalayas, which was formed by the mixing of tectonic plates such as India and Eurasia. Due to movements in these plates, areas like Delh-NCR, Kanpur and Lucknow, are most prone to earthquakes."

Quake Science Is Delhi due for a really big one

While the region continues to feel tremors and aftershocks, one of the big quakes recorded in Delhi was more than six decades ago. On August 29, 1960, an earthquake with epicentre along the Delhi-Gurugram border rocked the Capital.

Around 75 per cent of buildings around the epicentre developed cracks and minor damages were reported to Red Fort and Rashtrapati Bhavan. Around 100 people were injured because of falling debris and stampedes. The quake was said to be 6 on the Richter scale but researchers later said the magnitude was 4.8, according to a report in The Economic Times.

Experts say that there is consistent seismic activity going on in the NCR region, which can trigger big tremors. It does not help that many parts of Delhi and the surrounding areas are highly populated.

The border towns of Delhi have seen a rise in high-rise private buildings many of which do not follow mandatory guidelines set by the Bureau of Indian Standards (BIS) for earthquake-resistant construction. The numerous illegal colonies across the Capital and the shaky construction along the Yamuna will be unable to withstand a strong tremblor.

"At Richter scale 6.0, the effect of the earthquake in Delhi would be devastating. Many buildings would be razed to dust," professor Chandon Ghose told Business Standard in June 2020 after ten low to moderate-intensity tremors were recorded in the Delhi-NCR Region over one and a half months.

"Everyone knows that Delhi-NCR falls under seismic zone-4, and it's prone to tremors but still most of the builders do not conform to the norms of BIS. There is a nexus between architects and builders which somehow compromise the stringent earthquake (resistant) codes. So, on any given day, if an earthquake of higher magnitude strikes here, the consequences would be grievous," the professor added.

Quake Science Is Delhi due for a really big one

Places along the Yamuna and its flood plain will be worst hit if an earthquake jolts the Delhi-NCR region. AFP

In 2005 the Delhi government approved a United States aid project to retrofit some of its buildings with earthquake protection, including the secretariat and police headquarters. But the project was left incomplete, according to a report in Outlook.

Most structures in India ate built to prevent a collapse in case of a major quake but this does not ensure that the structure survives the disaster and can be reused immediately.

According to a report on the "seismic hazard microzonation" of Delhi brought out by the Ministry of Earth Sciences, most places along the Yamuna and its flood plains, including the highly populated colonies of east Delhi, will be the worst hit if struck by a powerful earthquake.

The Lutyens' area, which houses the Parliament, central ministries and other important structures, also fall under the high-risk zone along with Delhi University's north campus, Karol Bagh, Janakpuri, Paschim Vihar and Rohini. The Delhi airport and Haus Khaz fall under the second worst "high-risk category".

The area around Delhi has the most number of seismometers anywhere in the country – 16 out of 115 installed in India. Hence, even earthquakes of a small magnitude are recorded. However, this cannot help predict a big tremor.

"A big earthquake might still occur. No one can rule it out. But they cannot be predicted. So to say that these small earthquakes are precursors to the big one is totally unscientific," Harsh Gupta, one of India's foremost experts on earthquakes and a former director of the National Geophysical Research Institute told The Indian Express.

According to experts, most buildings in Delhi and Gurugram are not earthquake-resistant. AFP

He also said that the argument that smaller quakes help release the energy bit by bit so that a big one would not be necessary also does not hold. "Delhi area has experienced earthquakes of magnitude between five and six, but fortunately not in the last 50-60 years... You would need 1,000 earthquakes of magnitude 4 to release the energy equivalent of a magnitude 6 earthquake. These arguments have no basis," he told the newspaper.

# நடைப்பயிற்சி செய்யும் முறை

நெஞ்சை நிமிர்த்தி முன்னோக்கிப் பார்த்தவராக தரையை பார்க்காமல் இருபது அடி முன்னோக்கியவாறு நடக்க வேண்டும்.

நெஞ்சை உயர்த்தியவாறு தோள்களைச் சாதாரணமாக வும் கைகளை தளர்வாகவும் வைத்து நடத்தல் வேண்டும்.

கைகளை பக்கவாட்டில் ஆட்டாமல், முன்னும்-பின்னும் ஒரே சீராக ஆட்டியவாறு நெஞ்சுபகுதியை விட உயர்த்தி விடாமல் நடந்து செல்ல வேண்டும். அதற்கேற்றவாறு கால்களும் பின் தொடரும்.

அடி வயிற்றை கெட்டியாகவும் உறுதியாகவும் வைத்த நிலையில் முதுகை சமமாக நிமிர்த்தியவாறு உடலைச் சற்றே முன்புறம் சாய்ந்தவாறு நடகக வேண்டும்.

ஒரே நேர்கோட்டில் நடப்பதை போல கற்பனை செய்து கொண்டு காலடிகளை அருகருகே வைத்து விரைவாக நடக்க வேண்டும். நடக்க காலை உயர்த்தும் போது முன்னங்கால் விரல்களால் உடலை உந்தி தள்ளிய வாறும், காலை பூமியில் வைக்கும் போது குதிகாலை பூமியில் பதித்தவாறும், இதே முறையால் முன்னங்கால் விரல்களையும் பதியவைத்து முன்னோக்கி செலுத் துங்கள். இயல்பாக சுவாசித்து, ஒரே சீரான வேகத்தில் சுவாசித்து காற்றை அதிக அளவில் உட்செலுத்துங் கள். வேகமாகவும், அதேசமயத்தில் மூச்சிறைக்கும் அளவிற்கு இல்லாமலும் பார்த்துக் கொள்ளா வேண்டும்.

### நடைப்பயிற்சியின் வகைகள்

நடைபயிற்சியில் மூன்று வகைகள் உண்டு.

» மெதுவாக நடப்பது

எப்போதும் நடக்கும் சாதாரண வேகமின்றி, சிரம மின்றி நடப்பதாகும். இந்த வகை நடைபயிற்சி உடல்



வலி, சோர்வுகளை போக்கும். உடம்பில் உள்ள தசைகளை யும், எலும்பு இணைப்புகளை யும் இதமாக்கி காயம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும்.

உடல் பருமன் உள்ளாவர்களுக்கு ஏற்ற நடையாகும்.

» பவர் வாக்கிங்

கைகளையும், கால்களையும் வேகமாக வீசி நடப்பது. இப்படி வேகமாக நடப்பதால் உடம்பில் உள்ள கழிவுகள் எரிக்கப்பட்டு வியர்வை அதிகம் வெளியேறி உடல் சுத்தமாகும். தசைகளும் எலும்புகளும் அதிக வலுவைப் பெற்று தன்னம்பிக்கையை அளிக்கும். இந்த பவர் வாக் கிங் நீரிழிவுக்காரர்களுக்கு ஏற்ற நடையாகும்.

» ஜாகிங்

நடக்கும் முறையில் இருந்து சற்று வித்தியாசப்பட்டு மிதமாக, மிக மிக மெதுவான ஓட்டமாக மாறும். அதனால் நிறைய ஓட்சிசன் நுரையீரலுக்குள் சென்று ரத்தத்தை சுத்தப்படுத்தி இதயத்திற்கு அனுப்புகிறது. அதேசமயம் தேவையில்லாத கழிவுப்பொருட்களை வெளியேற்றி உடம்பில் உள்ள ஒவ்வொரு அணுவையும் சுத்தம் செய்யும். தினசரி ½ மணி முதல் 1 மணி நேரம் வரை ஜாகிங் செய்யலாம்.

இளைஞர்கள் 1 மணி நேரமும், 30-40 வயதினர் 45 நிமிடங்களும், அதற்கு மேற்பட்ட வயதினர் 20 நிமிடம் நடக்கலாம்.

### நடைப்பயிற்சி செய்வதினால் ஏற்படும் நன்மைகள்

சுவாசம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குணமடைய உதவுகிறது.

இரத்த ஓட்டம் சீரடையும். நரப்பு தளர்ச்சி நீங்கி, நரம்பு மண்டலம் சுறுசுறுப்படையும் நாளமில்லா சுரப்பிகள் புத்துணர்ச்சி பெறும் அதிகப்படியான கலோரிகள் எரிக்க உதவுகிறது. முதுக நரம்புகளை உறுதியாக்குகிறது. எலும்பு மூட்டு செயல்பாடுகளை எளிமையாக்குகிறது. எலும்புகள் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கிறது. உடலை உறு தியாக வைத்திருக்க உதவுகிறது. கெட்ட கொழுப்புச்சத்தின் அளவை குறைக்கிறது. மாரடைப்பு-சர்க்கரை நோயினை கட்டுப்பாட்டிற்குள் வைத்து உடலையும் - மனதையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்கிறது. உடல் மற்றும் மன்ச்சோர்வினை குறைக்கிறது. நன்கு தூங்கிட உதவுகிறது. கண்பார்வையை செழுமைபடுத்துகிறது. சுற்றுச்சூழல் மாசுபாடும், இரசாயன கழிவுகளும், நட்சுப்பொருட்கள் கலந்த உணவாலும், உடல் நலமும் - மனநலமும் பாதிக்கப்பட்டு வரும் இக்காலசூழலில், நச்சுக்காற்றின் தாக்கத்தை உடல் இயக்கத்தின் பாதிப்பை அளிக்காத வண்ணமும், செலவின்றி ஆரோக்கியமாக - மகிழ்வுடன் வாழ உதவும் எளிமையான வழியாகும்.


இயற்கையோடு இணைந்த பயிற்சிகளான



நீச்சல், ஜிம், வேக ஓட்டம், மெது ஓட்டம் , பளுதூக்குதல் தோட்ட வேலை, நாட்டியம், குதிரையேற்றம் , சைக்கிள் விடுதல்கடின உழைப்பு போன்றவை மிகச்சிறந்த பயிற்சிகள்.

பொதுவாக பயிற்சி எனப்படும் போது கருவிகள் தேவை. கட்டிடம் தேவை, கற்றுத்தரும் ஆசிரியர்கள் தேவை. இதற்கு எல்லாம் பொருளாதாரம் தேவை. ஆனால் இது எதுவும் நடை பயிற்சிக்கு தேவை இல்லை என்பதே இதன் சிறப்பம்சமாகும்.

சிறுவர்களாக இருக்கும் போது விளையாடுவதன் வழியாகவும், இளம் வயது முதல் கடினமான உடலு ழைப்பை செலுத்துவதன் வாயிலாக, உடல் ஆரோக்கியம் பெறுகிறது. ஆனால் இன்று உடலுழைப்பு பின்னுக்குத் தள்ளாப் பட்டு மூளை உழைப்பை செலுத்தக்கூடிய வர்கள் எண்ணிக்கை அதிகரித்து வரும் சூழலில், மருந்து, மாத்திரை, சிகிச்சைகளுக்கு அளிக்கும் முக்கியத் துவத்தினை குறைத்து நடைபயிற்சி, யோகா, தியானம், நீச்சல், வேக ஓட்டம் போன்ற பயிற்சிகளை மேற்கொண்டு, மன அழுத்தமின்றி, நோயற்ற, மகிழ்வான வாழ்வும், நீண்ட ஆயுளும்பெற்று வாழ்வோம் ! .




### மிதிவண்டி ஓட்டுதல் (சைக்கிளிங்)



மிதிவண்டி ஓட்டுதலையே / சைக்கிள் ஓட்டுதலையே ஆங்கிலத்தில் சைக்கிளிங் என்று கூறுகின்றனர். மிதிவண்டி ஓட்டுதல் ஒரு மிக சிறந்த உடற்பயிற்சி முறை. மிதிவண்டி ஓட்டுதல் குழந்தைகள், இளைஞர்கள், முதியோர்கள் என மிதிவண்டி ஓட்ட தெரிந்த அனைவராலும் செய்ய தக்கது. மிதிவண்டி ஓட்டுதலின் மற்றொரு சிறப்பு என்ன வென்றால் பிற பயிற்சிகள் செய்ய சிரமப்படும் மூட்டுவலி உடையோர் மற்றும் உடல் பருமனாக இருப்போர்கள் எளிதாக செய்ய கூடிய ஒன்றாக மிதிவண்டி ஓட்டுதல் உள்ளது. தற்போது மிதிவண்டி ஓட்டுதலை பல நாட்டு அரசாங்கமே போக்குவரத்து நெரிசலை குறைப்பதற் காவும், காற்று மாசுபடுதலை குறைப்பதற்காகவும் மக்களிடம் பயன்படுத்த அறிவுறுத்துகின்றனர்

இது மட்டுமின்றி மிதிவண்டி ஓட்டுதலின் மூலம் ஒரு நகரத்தின்/ கிராமத்தின் இயற்கை அழகை ரசிக்கவும் மற்றும் தூய்மையான காற்று கிடைக்கவும் உதவுகிறது மிதிவண்டி ஓட்டுவதால் நமது போக்குவரத்து செலவை யும் குறைக்கலாம்.

### மிதிவண்டி ஓட்டுதலுக்கு முன்

மிதிவண்டி ஓட்டுதலுக்கு முன் மிதமான உணவு அல்லது குறைந்த அளவு தண்ணீர் எடுத்து கொள்ள வேண்டும். அதிகமான உணவு / தண்ணீர் எடுத்து கொள்வதால் வாந்தி வர வாய்ப்புகள் உண்டு. அதே போல் உணவு உண்ணாமல் மிதிவண்டி ஓட்டு வதனால் மயக்கம், அதிக களைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

### மிதிவண்டி ஓட்டுதலுக்கு பொருத்தமான இடம்



மிதிவண்டி ஓட்டுதலுக்கு பொருத்தமான இடம் இயற்கை சூழலில் அமைந்த சாலைகள் அல்லது அதிக மான வாகனங்கள் செல்லாத சாலைகளை தேர்ந்தேடுப் பது நலம். ஏனெனில் அதிகமான வாகனங்கள் உள்ள சாலைகளை தேர்ந்தெடுப்பதன் மூலம் அதிகமான மாசு இல்லாமல் மேற்கொள்ளலாம் அதுமட்டுமின்றி மிதி வண்டியை வேகமாக ஓட்டவும் இயலும்.

### மிதிவண்டி ஓட்டுதல் மேற்கொள்ளும் முறை

மிதிவண்டி ஓட்டுதல் தொடக்கத்தில் மிகவும் மெதுவாக மேற்கொள்ள வேண்டும் மற்றும் ஆபத்து இல்லாத அல் லது டிராபிக் இல்லாத பாதையை தேர்ந்தெடுப்பது நலம். தொடக்கத்தில் 2-3 கிலோ மீற்றர் மட்டுமே பயிற்சி மேற் கொள்ளுங்கள்.

பயிற்சி அதிகரித்த பின் மித வேகமாகவும் அதிக தொலைவும் பயிற்சி மேற்கொள்ளலாம்.

## உள்ளம் உடல் நலம் காக்கும் அதிகாலை தோப்புக்கரணம்

அதிகாலையில் பல் துலக்கி, உடல் நீராடியபின் நம் முன்னோர்களின் வழி காட்டுதலின்படி உள்ளம் உடல் நலம் காக்க அதிகாலை தோப்புக்கரணம் போடுவோம்.

தோப்புக்கரணம் ஒரு உன்னதமான உடற்பயிற்சி அல்லது யோகா என்றால் உண்மை. 48 ஆண்டுகளுக்கு



முன் பள்ளிகளில் தண்டனையாகவும் பயிற்றுவித்தனர். தோப்புக்கரணம் சுத்தமான சம தலமான இடத்தில் (மரத்தின் கீழ் என்றால் மிகவும் நன்று) செய்ய வேண் டிய பயிற்சி. ஆடைகள் தளர்வாக இருத்தல் அவசியம்.

இரு கால்களையும் உடலின் அகலத்திற்கு வைத்து நின்றுகொள்ளவும், வலது காதை இடது கையாளும், இடது காதை வலது கையாளும் பிடித்துக்கொள்ள வேண்டும், இந்நிலையில் முழங்காலை மடக்கி உட் கார்ந்து எழவேண்டும். உட்காரும்போது மூச்சினை மெதுவாக உள்ளே இழுக்கவும், எழும்போது மூச்சினை மெதுவாக வெளியே விடவும். இப்பயிற்சியினை முதலில் 5 முறையும், பின் 7, 9, என்று பழகியபின் 21 முறை தோப்புக்கரணம் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

இதனால் உள்ளிழுக்கும் மூச்சுக்காற்றில் உள்ள பிராணவாயு 70% மூளைக்குசென்று உடலுக்கு புத்துணர்ச்சி, உள்ளத்திற்கு ஒரு நிலைப்பாடுகிடைக்கிறது. நம் நரம்பு மண்டலம் தூண்டப்பட்டு ஆரோக்கியம் அடைகிறோம். குழந்தைகளுக்கு மூளை செயல்பாடுகள் அதிகரித்து கல்வி, கேள்வி அறிவுச்செல்வம் பெருகுகிறது.





# உங்களுக்கு தெரியுமா?

» ஐரோப்பாவில், மரங்களில் வாழும் தவளைகள் அதிகம். இவை குரங்குகளைப் போல ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குத் தாவும்.

» நெருப்புக்கோழி, தனது உணவைச் செரிக்க வைப்பதற்காக சிறு சிறு கற்களை விழுங்கும். இது, மற்ற பறவையினங்களில் காணப்படாத வினோதமான செயல்.

» நல்ல நிலையில் உள்ள மனிதரின் கண்கள், சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்ட வண்ணங்களின் வேறுபாடுகளை அறியக்கூடியது.

» பிரான்ஸ்நாட்டில் உள்ள பிரபலமான ஈபிள் கோபுரத்தை வடிவமைத்தவர், கஸ்டவ் ஈபிள். இவர்தான் அமெரிக்காவில் உள்ள சுதந்திர தேவி சிலையை வடிவமைத்தவர்.

» ஒரு மனிதனின் சராசரி உயரம், அவனுடைய தலையின் உயரத்தைப் போல் சுமார் ஏழரை மடங்கு இருக்கும்.

» தந்தி அனுப்புவதற்கான சங்கேதக் குறியை, 1837-ம் ஆண்டு சாமுவேல் மோர்ஸ் என்ற அமெரிக்க அறிஞர் கண்டுபிடித்தார்.

» குழந்தை பிறந்த 15 நாட்களுக்குப் பிறகே கண்ணீர்ச் சுரப்பி வளர்கிறது.

» தீப நகரம் என்று அழைக்கப்படுவது, மைசூர்.

» நெருப்புக்கோழி மணிக்கு சுமார் 80 கிலோமீட்டர் வேகத்தில் ஓடும்.

» பைசா நகர சாய்ந்த கோபுரத்தில் 294 படிக்கட்டுகள் உள்ளன.

» அன்னாசிப் பழத்தில் விதை கிடையாது.

» ஒளிச்சிதறலைக் கண்டுபிடித்தவர், சேர். சி.வி.ராமன்.

» அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி, அன்னை தெரசா.

» கலர் டி.வி.யை முதன்முதலில் உலகத்திற்கு அறிமுகம் செய்த நாடு, பிரான்சு.

» பறவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் அறிவியல் துறைக்கு ஆர்னித்தாலஜி என்று பெயர்.

» மழையின் அளவைக் கண்டறிய உதவும் கருவி, ரெயின்கேஜ்.

» விலங்குகளில் அறிவுள்ளதாக கருதப்படுவது, டொல்பின்.

» ராணித்தேனீயின் ஆயுட்காலம், 3 முதல் 4 ஆண்டுகள்.

» கடற்குதிரை மீன், ஒரே நேரத்தில் தனது கண்களால் இரண்டு வெவ்வேறு பொருட்களைப் பார்க்கும் தன்மை கொண்டது.

» விதையில்லாமல் முளைக்கும் தாவரம் - தர்ப்பைப்புல்.

» உலகின் வெண்தங்கம் - பருத்தி.

» இந்தியாவின் மிக உயரமான கோவில் கோபுரம் - முருதேஷ்வரா கோவில் (கர்நாடகா).

» ஆரிய இனத்தவர்களின் தாயகம், மத்திய ஆசியா.

» விஞ்ஞானக் கழகத்தை ஏற்படுத்தியவர், சையது அகமது கான்.

» ‘குடியரசு’ என்னும் நாளிதழை நடத்தியவர், பெரியார்.

» வங்கப்பிரிவினை ரத்து செய்யப்பட்ட ஆண்டு, 1911.

» இந்தியாவை ஆட்சி செய்த கடைசி இந்தியப் பேரரசர், ஹர்ஷர்.

» வினாகிரியில், அசற்றிக்கமிலம் உள்ளது.

» தாவரங்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுப்பது, பொற்றாசியம்.

» சைக்கிளைக் கண்டுபிடித்தவர், மாக்மில்லன்.

# வீட்டில் அறிவியலின் பயன்பாடு

மின்சாரம் இல்லாமல் இன்றைய வாழ்வை நினைத்துப் பார்க்க இயலாத நிலைக்கு நாம் பழகிவிட்டோம். வீட்டில் அன்றாட செயல்பாடுகள் அனைத்தும் மின்சாரத்தை அடிப்படையாகக் கொண் டுள்ளது. நாம் பயன்படுத்தும் சாதனங்க ளையும், அவற்றில் செயல்படும் அறிவியல் தத்துவங்களையும் இங்கு காண்போம்.

மின் விளக்குகள் (Electric Lamps), மின் சமிக்ஞைகள் (Elecric Signals)



மின்ஆற்றலை ஒளி ஆற்றலாக மாற்றுகின்றன.

வானொலியில் மின் ஆற்றல் ஒலி ஆற்றலாக மாற்றப்படுகிறது

துணி துவைக்கும் இயந்திரம் (Washing Machine), மின்சார மோட்டார் (Electric Motor) மாவு அறைக்கும் இயந்திரம் (Wet Grinder) போன்றவற்றில் மின் ஆற்றல் இயந்திர ஆற்றலாக மாற்றப்படுகிறது.





மின் சமைப்பான் (Electric Cooker), மின் சலவைப் பெட்டி, (Iron Box) போன்றவற்றில் மின் ஆற்றல் வெப்ப ஆற்றலாக மாற்றப்ப



டுகிறது. இவை அனைத் தும்ஆற்றல் அழிவின்மை விதியின் அடிப்படையில் செயல்படுகின்றன. நீராவி குளிர்விக்கப்படுவதால் நீர்மமாகிறது என்ற தத்துவத்தின் அடிப்படையில் குளிர் சாதனப் பெட்டி (Refrigerator) செயல்படுகிறது.

# கல்விக்கதிர்

- அகரன் -

## அகத்திணைப் பாகுபாடு



» தொல்காப்பியர் கூறும் அகத்திணைப் பாகுபாட்டைப் பற்றி விளக்கிக் கூறுகிறது.

» திணைஎன்றால்என்னஎன்பதையும், அகத்திணை, புறத்திணை பிரிக்கப்பட்டதையும் இது விளக்கியுரைக்கிறது.

» அகத்திணை வகைகளையும், அகத்திணைக்கு இணையான புறத்திணைகளையும் பற்றிக் கூறுகின்றது.

» களவியல் என்பதையும், கற்பியல் என்பதையும் விளக்குகின்றது.

» அகத்திணையால் உணரப்படும் பண்டையபண்பாட்டையும்விளக்குகின்றது.

» இதைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

• திணைகள் என்றால் என்ன என்பதையும், அகத்திணை, புறத்திணை என்ற பிரிவிற்கான காரணத்தையும் விளங்கிக் கொள்ளலாம்.

» அகத்திணையில் உள்ள வகைகளையும், களவியல் கற்பியல் பிரிவுகளையும் விளங்கிக் கொள்ளலாம்.

» அகத்திணையால் உணர்த்தப்படும் பண்டைய பண்பாட்டைத் தெரிந்து கொள்ளலாம்.

2500 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த தொல்காப்பியர், தான் எழுதிய தொல்காப்பிய இலக்கண நூலினை மூன்று அதிகாரங்களாகப் பகுத்தார் என்பதைஅறிந்திருப்பீர்கள். எழுத்துகள் பிறந்தது முதல் அவை ஒன்றோடு ஒன்று இணைந்து மொழியாகும் தன்மைகளைக் கூறுவது எழுத்ததிகாரம். இவ்வெழுத்துகள்சொல்லாகி, அச்சொற்கள் அமையும் பாகுபாடுகள், அவற்றின் பெயர் வகைகள் முதலியவற்றைக் கூறுவது சொல்லதிகாரமாகும். இச்சொற்கள் இணைந்து பல்வேறு பொருள்களை உணர்த்தும். இது பொருளதிகாரம் என்று அழைக்கப் பெறுகிறது. பொருள் என்றவுடன் உடனே நாம் உணரும் செய்தி நம் உடைமைப் பொருள் களைத்தான். ஆனால் தொல்காப்பியர் பொருள் என்பதற்கு நம் உடைமைப் பொருளைக் குறிக்கவில்லை. அவர் வாழ்வியல் நிலைகளைக் குறிக்கின்றார். வாழ்வியல் நிலைகளை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றார். இவை பற்றிய விளக்கங்கள் தொல்காப்பியரின் அகத்திணையியலில் வருகின்றன. இவ்வகத்திணை இயல் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் முதல் இயலாகும்.

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

## நூல் நோக்கு

# தென்திருமலை தேசம் - பாகம்-3

நூலாசிரியர்–
அருமைநாதன் ஸதீஸ்குமார்




'பழமை அறியாதவனுக்கு புதுமையை உருவாக்கும் உரிமை இல்லை' என்னுரையில் நூலாசிரியர் தொடர்கின்றார் இலக்கியம் சாகா வரம் பெற்றது. சோழர் காலத்தில்தோன்றிய காவிய மரபானது தமிழர் முஸ்லிம்கள் என்ற பேதமின்றி மழைக்காவியம் ,கங்கைக்காவியம், குட்டிக்காளிக்காவியம், குறிஞ்சகமுனைக்காவியம், புகாரிகாவியம்,வெருகல்காவியம்,பட்டோலைக்காவியம், சம்பூர்பத்திரகாளியம்மன் காவியம் என்பன தோற்றம் பெற்றதாக அறியமுடிகின்றது. திருக்கோணமலையில் அந்த காலம் தொடங்கி இன்றைக்கு 2023 வரையான காலப்பகுதியில் வாழ்ந்த , வாழ்ந்துக்கொண்டிருக்கின்ற இலக்கியவாதிகளின் படைப்பு வரலாற்றுச் சின்னங்கள் ஏராளம் என்பது குறிப்பிடத்தக்கது.

சமூகத்தில் பல கலைப்படைப்புகள் செல்வாக்கு செலுத்தக் காரணம் மக்களின்ஓய்வு நேரம் என்பது இவ்வாறான செயற்பாடுகளில் ஈர்க்கப்பட்டது என்றே கூறலாம். கொட்டியாபுரம் பற்றின் கலை இலக்கிய வரலாற்றில் பல சிரமங்களை எதிர்நோக்கியே நிகழ்வுகளை ஆவணப்படுத்தியுள்ளார்.


புலவர் வே.அகிலேசப்பிள்ளை,வ.அ.இராசரெத்தினம், கலாநிதி சரவணபவன்,திருமலை நவம் பாலசுகுமார்,காசி நாதர்,சிவபாலன் ,எம்.ஏ.சமது என பல இலக்கியவாதிகளை பெயரிட்டு அவர்களை போற்றத்தக்கவர்கள் என்பதை பதிவிடுகின்றார்.

சடங்கு ,சம்பிரதாயங்களின் பற்றிய விபரங்களை அழகாக தொகுத்துந்துள்ளார். தென்னிந்தியாவிலிருந்து வந்த கலைஞர்கள் உள்ளூர் கலைஞர்களை ஊக்குவித்து பழக்கி கூத்துக்களை பல இடங்களில் அரங்கேற்றியுள்ளனர் என்பதையும், கலைஞர்களின் பெயர்கள், பிரதேசங்களின் பெயர்களையும் குறிப்பிடுகிறார்.

அண்ணாவி மார்களின் உருவாக்கத்தில் சாய்பு சகோதரர்களின் பங்களிப்பு அளப்பெரியது. இலக்கியமன்றங்கள்தோற்றுவிக்கப்பட்டு சிறப்பான முறையில் செயற்பட்டு வந்துள்ளது.




இலக்கிய அமைப்புகளும் செயற்பட்டு வந்துள்ளமைக்கான குறிப்புகளுடன்,பெயர்களை பட்டியலிடுகின்றார். முன்பதிவு செய்யப்படாமலே ஒற்றுமையுடன் பயணித்த கலை இலக் கிய அமைப்புகள். நம் முன்னோர் வாழ்ந்த வாழ்க்கை மகிழ்ச்சியானதேதி காவியங்கள் அவற்றிற்கான விளக்கங்களை பதிப்பு செய் கின்றார் நூலாசிரியர்.



என்றும் மாறுபடாத கடந்தகால நிகழ்ச்சிகளை பற்றி விளக்குவதே வரலாறு என அரிஸ்டாட்டில் கூறுவார். உலக வரலாற்றில் தமிழ்மொழியும், தமிழ் இனமும் அன்றுதொட்டு வீரமும், ஞானமும், செல்வமேன்மையும் நிறைந்த உன்னதமான வரலாறுகளைக் கொண்டவை. ஈழத்தமிழர் வரலாறும் அத்தகையதே.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்கள் செறிந்து வாழ்ந்த மூதூர் பிரதேசத்தின் கடந்த கால வரலாறுகளின் மீட்டுருவாக்கத்தின் ஓர் பகுதியாக தென்திருமலை தேசம் பாகம் - 03 என்னும் இந்நூல் அமைகின்றது. ஏலவே இதன் முதலாம் இரண்டாம் பாகங்கள் வெளிவந்த நிலையில் தற்போது மூன்றாம் பாகம் அதன் தொடர்ச்சியை பூரணப்படுத்துகிறது.

ஈழத்து இலக்கிய வரலாற்று ஆய்வுத் துறைகளில் சம்பூரைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்திய கலாநிதி அ.ஸதீஸ்குமாரின் வருகை முக்கியமானது. பெரிதும் ஆய்வாளர்களால் கவனம் செலுத்தப்படாமல் இருந்த மூதூர் பிரதேசத்தின் வரலாற்று தகவல்களை அயராத முயற்சியால் தொடர்ச்சியாக பல ஆய்வு நூல்கள் ஊடாக வெளிப்படுத்தி ஆவணப்படுத்திய சிறப்பு அவருக்குரியது. துறைசார் புலமையும் பொறுமையும், தேடலும் தொன்மத்தின் மீதான காதலும் ஒருங்கு சேர வாய்க்கப் பெறுபவர்களால் மட்டுமே வரலாற்றை எழுதமுடியும். வரலாறு தன் பக்கங்களில் அ.ஸதீஸ்குமார் வைத்தியராக அன்றி ஓர் வரலாற்றாய்வாளனாக பதிவு செய்யவே விருப்பும் முனைப்பும் கொண்டுள்ளது. இந்நூலாசிரியரின் ஆய்வு நூல்களை புறந்தள்ளி யாரும் இனி மூதூர் பிரதேசத்தின் வரலாறுகளை எழுதி விடமுடியாது. மூதூர் பிரதேசத்தை மையப்படுத்தி எதிர்காலத்தில் வரப்போகும் விரிவான ஆய்வுகளுக்கெல்லாம் இனி வைத்தியகலாநிதி அருமைநாதன் ஸதீஸ்குமாரே திறவுகோல் காலமும் இதையே கருதிற்று என்க.

அன்புடன்
கவிஞர் ப. சுஜந்தன்
சம்பூர்

9 789554 470330

Ben Vision Printers & Publication
Trincomalee - 0769000035

கொட்டியாபுரத்திலுள்ள பல கிராமங்களை வளமாக்கிக்கொண்டிருக்கின்ற மாகவலி கங்கையின் அழகுக்கொரு காவியமாக கங்கை காவியம் உள்நாட்டு யுத்தம் பாதிப்புகள் ஏற்படும் முன்னே கிராமத்து இளைஞர்களாகவும் , குடும்பங்களாகவும் காட்டுக்குள் சமைத்து மகிழ்ந்து மாலையில் வீடு திரும்புவதைக்கருப்பொருளாக கொண்டு பாடப்பட்ட காவியம் குறிஞ்சா முனைக்காவியம்.

மூதூரின் இயற்கை அழகும், வளங்களும் சிறப்புற, இஸ்லாமியமதம் சார்ந்தாக கூறப்பட்ட காவியமாக புகாரிகாவியம் என காவியங்களின் சிறப்புகளை கூறுவதுடன் பலரால் இன்று அரிதாக பாடப்படுகின்றது என் பதையும் மிக வேதனையுடன் நூலாசிரியர் பகிர்கின்றார்.புராணங்கள், காவியங் கள் அவைகளின் வகைகள், ஒவ்வொன்றிற்குமான விளங்கங்களை ஆவணங்கள் மூலமாக விளக்குகிறார்.

மூதூரின் முதல் நூல் வெளியீடு,மூதூர் முத்தமிழ் விழா சிறப்பு மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது.

கொட்டியாரபுரப்பற்று இலக்கியவாதிகள் இலக்கிய வாதிகளின் புகைப்படங்களுடன் அவர்கள் ஆற்றிய இலக்கிய பணிகளை விபரிக்கின்றார்.

'எழுத்தாளர்களை ஆவணப்படுத்துவதே நோக்கேயன்றி அவர்களது படைப்புகளை விமர்சனத்துக்கு உட்படுத்தவதல்ல என்பதை இப்புத்தகத்தில் குறிப்பு என கோடிட்டு காட்டுகின்றார். நூலாசிரியரின் பெருந்தன்மை இங்கே புலப்படுகின்றது. கொட்டியாபுரப்பற்று அரசியல் பிரதிநிதித்துவங்கள் –

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரின் வருகை அதைத் தொடர்ந்து அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள்,பாரளுமன்ற பொது தேர்தல்கள்,மாகண சபைத் தேர்தல்கள், கொட்டியாபுரப்பற்று அரச நிர்வாக சபைகள் என அரசியல் வளர்ச்சியினை பிரதிநித்துவப் படுத்துவதைக் காணலாம்.

கொட்டியாபுரப்பற்று பாடசாலைகள்– கல்வி ஆரம்பக் காலங்களில் திண்ணைப் பள்ளிகள் ஐரோப்பியர்களின் வருகையுடன் மாற்றம் பெறுவதைக்காணலாம்.

நான் மீண்டும் மீண்டும் வாசித்த பக்கம்23 'தமிழ் பண்டிதர்களும்,புலவர்களும், வித்துவான்களும் வாழ்ந்த போதிலும் இவர்களில் பலரின் ஆக்கங்களும் புலமைகளும் காட்டில் எரித்த நிலாப்போல பிறக்குப் பயன்படாமலேயே மறைந்த விட்டன' ஈழத்து இலக்கிய வரலாற்றில் மேலும் பல ஆய்வுகளை மேற்கொண்டு பல இலக்கிய நூல்களை இச்சமூகம் எதிரபார்த்தவர்களாய். வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

இந்நூல் தனது இலக்கிய நண்பன் சண்முகம் அருளானந்தம் ன்கேணிப்பித்தன் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்துள்ளார். 115 பக்கங்களைக் கொண்டுள்ள புத்தகம்.

கொட்டியாரபுரப்பற்று கலை இலக்கியங்கள்–மூதூர் பிரதேசத்தின் தொன்மை வரலாற்றைக் கொண்டதாக ஆரம்பமாகின்றதே இந்நூலின் சிறப்பம்சம்.

**திருகோணமலை றொசில்டா அன்றோ.**



## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்




# பணிப்பெண்ணான பட்டத்து ராணி

அரசரும் அரசியும் வீற்றிருக்க, அந்தக் கோயில் மண்டபத்தில் ஓர் அழகிய, பதியிலார் மனைப் பெண் தேவாரப் பண்ணுக்குப் பதம் படித்து அற்புதமாக நடனமாடிக் கொண்டிருக்கிறாள். இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் அரசர், ஓர் அருமையான ஜதியில் மெய் சிலிர்த்துப் போய், "ஹா! ஆஹா! அதி உன்னதம்," என வாய் விட்டுப் பாராட்டி கை தட்டுகிறார். அங்கே மண்டபத்தில் கூடியிருந்த பக்த ஜனக் கூட்டத்திலிருந்து ஒரு குரல், "தெய்வ கைங்கர்யத்திற்கே தன்னை அர்ப்பணித்த அடியாளாகிய பதியிலார் மனைப் பெண் பரதம் ஆடினால் இத்தனை ரசிக்கின்ற நீ, உன் மனையாளாகிய அரசியை இதேபோன்று இக்கோயில் ஒன்றிலே ஆட விடுவாயா? அரன் தொண்டே இனி அரசி தொண்டு என்று உன்னால் அறிவிக்க இயலுமா?" என ஒலிக்கிறது. கூட்டத்தில் ஒரே பரபரப்பு.

"யார் யார் இப்படி அநாகரிக வினாக்கணை தொடுத்தது?"

ஆலய அதிகாரிகள் ஆவேசம் கொள்கின்றனர். பக்தர் கூட்டத்தில் பதற்றம் பரவுகிறது. "நான் இல்லை... நீ இல்லை... அவர் இல்லை. அதோ அந்தப் பக்கம்இருந்துதான் குரல் எழுந்தது. இதோ இப்போது தான் ஒரு பரதேசி கையில் திருவோட்டுடன் மெல்ல நழுவினான். அவனாகத்தான் இருக்கும்" ஆளாளுக்கு ஏதேதோ பேச, ஒவ்வொருவரும் தங்களை நிரபராதி என நிரூபிக்க முயல, 'பிராகாரம் முழுக்கத் தேடியும் நழுவிய ஆள் அகப்படவில்லை' என்று அதற்கு ஒரு மாயா சமாதானம் கற்பிக்க முயல, நொடிக்குள் ஏகப்பட்ட களேபரம்.

"அமைதி அமைதி" என்ற கம்பீரக் குரல் கேட்டு, அனைவர் தலைகளும் கவனமும் திரும்புகின்றன. அங்கே அரசர் எழுந்து நின்று, "பக்த மகா ஜனங்களே, அக்குரல் எழுப்பியது யார் என்கிற ஆராய்ச்சி தேவையில்லை. அதை நான் ஈசன் கட்டளையாக ஏற்கிறேன். இன்று இக்கணம் முதல் என் மனைவி இத்திருவிடைமருதூர், மகாலிங்கேஸ்வர சுவாமி ஆலயத்தின் அடிமை, இனி அவள் அரசியல்ல. இந்த ஆலய மண்டபத்திலேயே அவள் பக்தர்களை மகிழ்விக்க ஆடலாம், தேவாரப்பண் பாடலாம். இதர தேவரடியார் பெண்கள் தங்கியிருக்கும் பதிவிலார் மனை வளாகத்திலேயே அவள் தங்குவாள்.

அதிகாலையில் எழுந்து வந்து, இறைவன்–இறைவி சந்நிதிகளை நீர் தெளித்துக் கூட்டிப் பெருக்கிக் கோலமிடுவாள். மலர்கள் பறித்து, மாலை கட்டித் தருவாள். ஆலயம் அளிக்கும் நிவேதனம் பட்டை சாதம் தான் இனி அவள் உணவு" எனக் கூறிவிட்டு, எதுவுமே நடவாதது போன்று அமைதியாக நடந்து சென்று விட்டார்.

அரசியாரும் இதை ஏற்பது போன்று மௌனம் சாதித்தார். அவர் முகத்தில் மகிழ்ச்சியோ, மலர்ச்சியோ குன்றவில்லை. அரசர் செல்லும் திசை நோக்கி, இருகரம் கூப்பித் தொழுதபடி இருந்தார். கூட்டத்தினருக்கோ அதிர்ச்சி, ஆச்சர்யம். பிரமிப்பு பிடரி பிடித்து உலுக்கிற்று.

"உலகில் யார் செய்யக்கூடும் இச்செயல்! என்ன அரசர் இவர் என்ன மனிதர் இவர்! யாரோ ஒரு அநாம தேயம் எங்கிருந்து பேசுகிறான் என்பதே புலப்படாத உளறல் பேச்சுக்கு இவர் ஏன் இத்தனை முக்கியத்துவம் அளிக்க வேண்டும்? கட்டிய மனைவியை அதுவும் பட்டத்தரசியைப் போய் தேவரடியார் பெண்களில் ஒருத்தியாக்குவதா? அநீதி அடுக்கவே அடுக்காது இச்செயல் !" என்றுவாய்விட்டே குமுறினர் பலரும். அவர்கள், வரகுண பாண்டியனின் உன்னத உள்ளம், உயரிய சிவபக்தி பற்றி ஏதும் அறியாதவர்கள்.

மணிவாசகப் பெருமானுக்கு அவருடைய அதியற்புத சிவபக்தியை அறியாத நிலையில், தாம் பெருந்தீங்கு விளைவித்து விட்டதாக எண்ணி, நெடு நாட்கள் உளம் நலிந்து கிடந்தார், பாண்டிய மன்னர் வரகுணர். இந்த சமயத்தில்தான் ஒருநாள் அவர், வைகைக் கரை வனப்பகுதியில் வேட்டைக்குச் சென்று திரும்பும் அந்தி வேளையில், ஒரு வன்னி மரத்தினடி யில் சோர்வுடன் சரிந்து கிடந்த கிழ வேதியன் மீது புரவி ஏறி மிதிக்கக் காரணமாய் இருந்து விட்டார். அவர் அறியாது நிகழ்ந்த செயல்தான் அது. புரவியின் கால்கள் அந்த வயது முதிர்ந்த வேதியனின் உடலில் படக் கூடாத இடத்தில் வேகமாகப் பதிந்து விட்டதால், பயங்கர அலறல் எழுப்பி, அரை நொடியில் உயிரை விட்டு விட்டார் அவர்.

புரவியிலிருந்து கீழே குதித்த வரகுண பாண்டியர், நெற்றி, மார்பு, புஜங்களில் விபூதிக் கீற்றுகள் ஒளிர, ஆவி துறந்து கிடந்த அம்முதியவரின் உடல் கண்டு துடித்துப் போனார். ஈமக்கிரியைகளுக்கு ஏற்பாடு செய்து, அவ்வேதியர் குடும்பத்துக்கு இழப்பீடுகள் வழங்க ஆணை பிறப்பித்தார். சகலமும் செய்த பிறகும் அரசரின் உள்ளத்தை வேதனை வாட்டியது. கண்களை எப்போது மூடினாலும், சிவச் சின்னங்களோடு வாய் பிளந்து மல்லாந்து கிடந்த அம்முதியவரின் முகமும் உடலும் தான் தோன்றின. காதுகளில் அவர் எழுப்பிய இறுதி அலறல், உயிரைப் பிடுங்கியெறிவதுபோல் ஒலித்தது.

'ஏன் ஏன் இத்தனை சிவ அபசாரம் என் வாழ்வில் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது! நானும் என் முன்னோர்கள் காட்டிய வழியில், குறைவற்ற சிவபக்தியோடுதானே இருக்கிறேன் இருந்தும் ஈசன் உள்ளம் இளகவில்லையே! எனக்கு பிரம்மஹத்தி தோஷம் பீடித்திருப்பதாகப் பலரும் கூறுகின்றனர். இந்த மனச்சோர்வே என்னை மாளச் செய்துவிடும் போலிருக்கிறதே!' என உளம் வெதும்பினார், வரகுணர்.

அன்றிரவு அவர் கனவில், சோம சுந்தரப் பெருமானைப் பூஜிக்கும் அர்ச்சகர் வடிவில் ஈசன் தோன்றி, "மன்னா, நீ திருவிடைமருதூர் செல்லப் போகிறாய். அங்கு உனைப் பீடித்த பிரம்மஹத்தி விலகும். உன் சிவபக்தியை உலகறியும். ஈசன் உனை அங்கேதான் ஆட்கொள்ளப் போகிறார்" என்று உரைத்தார். வரகுண பாண்டியர் இதை எப்படி நம்புவது என்று புரியாமல், சந்தேகமும் குழப்பமும் அடைந்தார். காரணம், திருவிடைமருதூர் இருப்பது சோழ தேசத்தில்.

அங்கே இப்போது செல்ல வேண்டிய அவசியம் என்ன நேரப் போகிறது?

பல்லவ மன்னன் நிருபதுங்கனுக்குப் பின் காஞ்சியில் அரியணை ஏறிய அபராஜிதன், பாண்டியர் நட்பை மதிக்கவில்லை. எல்லைப் பிரச்னைகள் எழுந்தன. கங்க மன்னன்பிரிதிவீபதியின் துணையுடன் படை திரட்டுகிறான். பாண்டியரை வெல்ல என்று செய்தி. விஜயாலய சோழன் புதல்வன் ஆதித்தனும் இதில் கூட்டு சேருகிறானாம். சோழர் எழுச்சியை ஆரம்பத்திலேயே ஒரு தட்டு தட்டி வைக்க வேண்டும் என்றனர் பாண்டிய நாட்டின் அரசியல் ஆலோசகர்கள்.

துவங்கியது போர். பாண்டிய சைன்யம் சூறாவளியெனத் தாக்கிற்று, சோழ பூமியை. குடமூக்கை முடமூக்காக்கி, வடகரையின் இடவையில் மையம் கொண்டது போர்ப்புயல். வேம்பில் மதிள்களைத் தகர்த்து, வெற்றிப் பதாகையுடன் திருப்புறம்பியத்தில், கங்க மன்னனைக் களத்தில் வென்று, வீழ்த்தியும் ஆயிற்று. அப்போது பார்த்தா அப்படியொரு திருப்பம் நிகழ வேண்டும்?

பாண்டியர் படை தங்கியிருந்த காவிரிக் கரையில் ஒரு சிவாலயம் தென்பட்டது.மன்னர் அந்த ஊர் பற்றியும் ஆலயம் பற்றியும் விசாரித்தார். அதுதான் திருவிடைமருதூர் என்றும் அங்கிருப்பது மத்தியார்ஜுனம் என்று புராணங்கள் போற்றும் மருதவாணர் ஆலயம் என்றும் கூறினர் மக்கள்.அவ்வளவுதான் ஈசனின் கனவுக் கட்டளை நினைவில் எழ, பாண்டிய மன்னர் மருதமாணிக்கம் எனப்படும் மகாலிங்கப் பெருமானைத் தரிசிக்க வந்து அந்தஆலயத்தில் புகுந்தவர்தான். அதன் பிறகு அவரை அந்தத் திருவிடைமருதூரிலிருந்து வெளியேற்ற யாரா லும் முடியவில்லை. பாண்டியர் படை மறுநாள் போரில் தோற்றன. திருப்புறம்பியத்திலிருந்து மதுரைக்கு விரட்டப்பட்டன. ஆனால், வரகுண பாண்டியனை என்ன செய்வதென்றுதான் ஆதித்த சோழனுக்குப் புரியவில்லை. அவன் ஒருநாள் பாண்டிய மன்னரை வந்து சந்தித்தான்.

"என்னைச் சிறைப்படுத்த வந்திருக்கிறாயா?" என்றார் அவனிடம், வரகுண பாண்டியர்.

ஆதித்த சோழன் நன்றாகவே அறிவான், வரகுணரின் இளவல் பராந்தக பாண்டியன் எவ்வளவு பயங்கரமானவன், பலசாலி என்பதை. மதுரையின் ஆட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்துவிட்டுத்தான் அண்ணன் இங்கு வந்திருக்கிறான். உள்நோக்கம்தான் புரியவில்லை. 'நரி வலம் போனாலும் சரி, இடம் போனாலும் சரி, மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி' என்றெண்ணிக் கொண்டான்.

"தங்களை நான் இப்போது போர்க்களத்திலா சந்திக்கிறேன், அரசியல் பேச? அப்படியும்கூட பாண்டிய மாமன்னரை சிறைப்படுத்துவதாக நான் பகற்கனவு கண்டதில்லை. பக்தியோடு மருதவாணர் ஆலயத்தில் தங்கியிருக்கும் தங்களுக்கு நான் ஏதும் உதவி செய்ய வேண்டுமா எனக் கேட்கவே வந்தேன்" என்றான்.

"உதவி! நான் தங்க ஓரிடம் வேண்டும். மதுரையிலிருந்து என் துணைவி இங்கு வந்து தங்க ஒப்புதல் கொடு. மகாலிங்க ஈசனைத் தரிசித்தபடி இங்கேயே தங்கியிருக்க விரும்புகிறேன். நீ தஞ்சையில் கோட்டை கட்டு. உன் ஆட்சியைப் பலப்படுத்து. சோழ தேச அரசியலில் நான் தலையிட மாட்டேன்" ஆதித்த சோழன், அரசியல் நாகரிகம் உணர்ந்தவன். பாண்டிய வேந்தனின் பக்தி உணர்வைப் புரிந்துகொண்டான். வரகுணர் தங்க மாபெரும் மாளிகை ஒன்றினை அளித்தான். பாண்டிமா தேவியாரையும் உரிய மரியாதைகளுடன் அழைத்துவரச் செய்தான்.

பராந்தக பாண்டியன், அண்ணனை மீண்டும் மதுரைக்கு வரவழைக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. "தம்பி! இனி நீயே மதுரை மகுடம் சூடி ஆட்சி செய். நான் மருதவாணர் ஆலய சேவையிலேயே நிம்மதி காண்கிறேன்" என்று கூறிவிட்டார்.

ஈசன் திருக்கோயிலைப் புதுப்பித்து, பிரமாண்ட மதிற்சுவர் எழுப்பி, புதிய கோபுரமும் அமைத்தார். அது 'வரகுணபாண்டியன் திருநிலை' என்றே பெயர் பெற்று விட்டது. பாண்டியன் தங்கியிருந்த மாளிகையில் புகுந்த திருடன் ஒருவன் கையும் மெய்யுமாகப் பிடிபட்டான். அவன் நெற்றியில் திருநீறு துலங்குவது கண்ட வரகுணர், தலை நீக்கி அவனை விடுவிக்க உத்தரவிட்டார், காவலர்களிடம் வேண்டிய பொருளும் நல்கினார். இரவில் கேட்ட நரிகளின் ஊளை, திருக்குளத்தில் கத்தும் தவளைகளின் ஒலி அனைத்தும் சிவநாம ஜபமாகவே அவருக்குத் தோன்றியதாம். வேப்பம்பழம் ஒவ்வொன்றும் சிவலிங்கம்போல் தோன்றியதால் அவை மண்ணில் விழா வண்ணம் பட்டு விதானம் அமைத்தார். தெருவில் திரியும் நாய்கள் நிழலில் படுக்கச் சில மண்டபங்களை எழுப்பிய கருணாமூர்த்தி அவர்.

பாண்டிமாதேவியையே மருதவாணர் ஆலயப் பணிப்பெண்ணாக்கி, தனிச்சேரிப் பெண்டிருடன் தங்க அனுமதித்தது வரகுணரின் சிவபக்திக்கு உயரிய அத்தாட்சி.

(இம்மன்னன் கி.பி.862ல் அரியணை ஏறியவன், இரண்டாம் வரகுணன் என வரலாறு பேசும். மாணிக்கவாசகரின் சம காலத்தவன். அவர் தமது திருச்சிற்றம்பலக்கோவையாரில் இம்மன்னனைக் குறிப்பிட்டுள்ளார். பட்டினத்தார் தமது,'திருவிடை மருதூர் மும்மணிக் கோவை'யில் இவ்வாறு குறிப்பிடுகிறார்):

வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளனை கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பன்னரி யூளை கேட்டரனைப்
பாடினவென்று படாம் பல வளித்தும்
குவளைப் புனலிற் றவளை யரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்...
– என்னும் அப்பாடலின் இறுதி வரிகளில்
காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற்கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்...
–என இவ்வரலாற்றின் சாரம் அனைத்தையும் பதிவு செய்துள்ளார்.

பட்டினத்தடிகள். அப்பாண்டிமாதேவியின் சிலை இன்றளவும் திருவிடைமருதூர் மகாலிங்க ஈசன் ஆலயத்தில் உள்ளது.

## நாணய நிதியத்தின் .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)
தீவிரப்படுத்தியது. அந்தப் பொருளாதார பாதிப்பை ஆட்சியின் கூட்டணி உறுப்பினர்கள் அரசியல் நெருக்கடியாக மாற்றியமைத்து இறுதியில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தினார்கள்.

நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்வதற்காக கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

வங்குரோத்து அடைந்து விட்டோம் என அறிவித்ததை தொடர்ந்து உலக நாடுகள் இலங்கைக்கு எதிராக நிதியுதவி மற்றும் அபிவிருத்தி சார் திட்டங்களில் மட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

ஆகவே உண்மையில் இலங்கை வங்குரோத்து நிலை அடைந்ததா என்பதை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்பதை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம் – என்றார்.

## ஆர்ப்பாட்டத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நளினி சுபாகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது கைதானவர்கள் 18 பேர் மீதும் நீதிமன்றத் தடை உத்தரவை மீறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் பொலிஸாரால் முன்வைக்கப்பட்டன.

அதேவேளை, கைதானவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் பிணை விண்ணப்பம் செய்தனர்.

பொலிஸார் மற்றும் கைது செய்யப்பட்டவர்களின் சார்பான விண்ணப்பத்தை ஆராய்ந்த மேலதிக நீதிவான், கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் விடுவித்து கட்டளையிட்டதுடன், வழக்கை 22.02.2023 ஆம் திகதிக்குத் தவணையிட்டார்.

## காதலர் தினத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கல்முனை வாழ் பெற்றோர்கள், சமய அமைப்புகள் மற்றும் பல்வேறு சமூக அமைப்புகள் முன்வைத்த சில முறைப்பாடுகளுக்கமைய இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று கல்முனை மாநகர மேயர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு காதலர் தினத்தில், இது போன்ற பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே, இது போன்ற ஒரு நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் சமூக நோக்குடன் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்களிடமும் தங்களது ஆண், பெண் பிள்ளைகளை அன்றைய தினத்தில் மேலதிக வகுப்புகளுக்கு அனுப்ப வேண்டாம் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது – என்றும் கல்முனை மாநகர மேயர் கூறினார்.

இதேவேளை, கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதியினுள் தனியார் வகுப்புக்களை நடத்துபவர்கள் கல்முனை மாநகர சபையிடம் அனுமதி பெற வேண்டும் என்ற நடைமுறை ஏற்கனவே அமுலில் உள்ளது.

அத்துடன், தனியார் வகுப்புக்கள் நடாத்தப்படுவதற்கான சில ஒழுங்கு விதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கான சுத்தமான காற்றோட்ட வசதி, இருக்கை ஒழுங்குகள், கழிவறை வசதிகள் என்பன சீராக இருக்கும் பட்சத்தில் மாத்திரமே அவர்களுக்கு தனியார் வகுப்புக்களை நடத்த அனுமதி வழங்கப்படும் என்ற முறைமையும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் கல்முனை மாநகர மேயர் ஏ. எம்.றகீப் மேலும் குறிப்பிட்டார்.

## மீண்டும் நில அதிர்வு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அளவுகோலில் 2.3 புள்ளியளவிற்கு இந்த நில அதிர்வு பதிவு செய்யப்பட்டதாக தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்தது.

இந்த நில அதிர்வுகளால் பாதிப்பு ஏதும் இல்லை என்பதால் பொதுமக்கள் அனைவரையும் பதற்றமடையாமல் இயல்பாகவே இருக்கும்படி அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதே மொனராகல மாவட்டத்தில் வெள்ளிக்கிழமையும் சிறிய நில அதிர்வுஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 3 புள்ளிகளாகப் பதிவான இந்த நில நடுக்கம் புத்தல, வெல்லவாய, கந்தப்பனகல ஆகிய இடங்களில் உணரப்பட்டது என்று தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி அமைப்பு மேலும் தெரிவித்தது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622






நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 28 சனிக்கிழமை 11.02.2023 கதிர் 346

## யாழ். மாநகர சபை உறுப்பினர் றெமீடியஸ் இன்று உயிரிழப்பு!



(கலையமுதன்)

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதியில், சிறுப் பிட்டிப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த யாழ். மாநகர சபை யின் ஈ.பி.டி.பி. உறுப்பினர் மூத்த சட்டத்தரணி மு.றெமீடி யஸ் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். 2

## சுதந்திரதின நிகழ்வுகளை எதிர்த்து

# யாழ். நகரில் போராட்டம் நடத்தியோர் மீது தடியடி பொலிஸார் முரட்டுத்தனம்

### சட்டைகள் கிழிந்து தொங்கத் தொங்க கைது செய்து வாகனங்களுக்குள் தூக்கி வீசினர்







(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் நடக்கும் சுதந்திரதினக் கொண்டாட்டத்தை எதிர்த்து அமைதிவழியில் போராட்டம் நடத்தியவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தி, கையில் கிடைத்தவர்களை பிடித்திழுத்துச் சென்று வாகனங்களுக்குள் எறிந்து பெரும் அட்டகாசம் புரிந்தனர். 2

## 7 பேர் கைது



(இ.கலையமுதன்)

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், பேச்சாளர் சுகாஸ் உட்பட எழு பேர் வரை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இலங்கை ஜனாதிபதியின் பங்கேற்புடன் இடம்பெறவுள்ள சுதந்திர தின விழா கொண்டாட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## மைத்திரியின்குற்றச்சாட்டால் தெற்கில் பெரும் அதிர்வலை!

### விமல், டலஸ் அணிகள் கடும் கொதிப்பு



முன்னாள் அமைச்சர் ரெஜினோல்ட் குரேவைக் கொலை செய்து விட்டார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள கருத்து தெற்கு அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இடதுசாரிக் கட்சிகள் மற்றும் மொட்டுக் கூட்டணியிலிருந்து 2

## கரையொதுங்கின திமிங்கலங்கள்

புத்தளம் கற்பிட்டி கண்டகுழி பகுதியில் இன்று அதிகாலை திடீரென சுமார் 12 திமிங்கலங்கள் உயிருடன் கரையொதிங்கியுள்ளன. அவற்றைத் திருப்பிக் கடலுக்குள் கொண்டு சென்றுவிடுவதற்கு முழு முயற்சி எடுக்கப்பட்டது. எனினும் அவற்றில் மூன்று இறந்துவிட்டன. எஞ்சிய 9 திமிங்கலங்களும் கடலின் ஆழமான பகுதிகுள் இழுத்துச் சென்று விடப்பட்டன.

காலையில் திமிங்கலங்கள் கரையொதிங்கிய செய்தி அறிந்ததும் கண்டகுழிவன உயிரிகள்திணைக்கள அதிகாரிகள் கற்பிட்டி விஜய கடற்படை முகாம் படையினர் மற்றும் கிராம மக்கள் இணைந்து அவற்றை மீண்டும் கடலின் ஆழமான பகுதிகளில் விடுவதற்கு முயற்சி எடுத்தனர்.

திமிங்கலங்களை கயிறுகளால் கட்டி இயந்திரப்படகு மூலம் இழுத்துக் கொண்டுச் சென்று கடலின் ஆழமான பகுதியில் விடும் முயற்சி வெற்றியளித்தது. 9 திமிங்கலங்கள் அவ்வாறு விடுவிக்கப்பட்டன. ஆனால் 3 திமிங்கலங்கள் அதற்கிடையில் உயிரிழந்திருந்தன என்று வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகள் கூறினர். 2

### இந்திய அரசின் முழு நிதியுதவில் அமைக்கப்பட்ட

## யாழ்ப்பாண கலாசார நிலையத்தை மக்களுக்கு உரித்தாக்கினார் ரணில்



(ந.லோகதயாளன்)

இந்திய அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார நிலையம் இன்று காலை மக்களின் பயன்பாட்டுக்கு உரித்தாக்கப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிலையத்தின் நினைவுக்கல்லைத் திரை நீக்கம் செய்துவைத்து மக்களுக்குரியதாக்கினார். 8

## முதல் 'டியூட்டி பிரீ' -கடை பலாலியில் இன்று திறப்பு

பலாலியில் உள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இன்று தீர்வையற்ற கடைகள் (Dutyfree) திறந்து வைக்கப்பட்டன.

சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநருமான மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி பயணி ஒருவருடன் இணைந்து நாடா வெட்டி திறந்து வைத்தார்.

விரைவில் சென்னை– பலாலி இடையிலான விமான சேவை அதிகரிக்கப்படவுள்ளதாக சிவில் விமான சேவைகள் 8

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## யாழ்.நகரில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதாகைகளுடன் மிக அமைதியாக யாழ். பேருந்து நிலையம் முன்பாக வீதியில் ஊர்வலமாகச் சென்று தமது எதிர்ப்பை வெளிக்காட்டிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்கள் மீதே பொலிஸார் இப்படி முரட்டுத்தனமாக தாக்குதல் நடத்தினர்.

தடியடி நடத்திக் கலைக்கப்பட்டபோது ஓடியவர்களை விரட்டி விரட்டி கொட்டன்களால் தாக்கினர் பொலிஸார். வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் பலவற்றையும் அடித்து நொருக்கினர். காலைக்கதிர் செய்தியாளரின் மோட்டார் சைக்கிளும் இப்படி அடித்துடைத்துச் சேதமாக்கப்பட்டது.

இலங்கையின் 75ஆவது சுதந்திரதினமான பெப்ரவரி 4ஆம் திகதியைக் கரிநாள் என்று அறிவித்து யாழ்ப்பாணத்தில் முழு அடைப்புப் போராட்டமும் நடத்தப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் அன்றைய தினம் இலங்கை அரசைக் கண்டித்து வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணியையும் தொடக்கியிருந்தனர். இந்தப் பின்னணியில் இன்று ஜனாதிபதி செயலகத்தால் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுதந்திரதின நிகழ்வுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் போராட்டங்கள் இடம்பெற்றன.

பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் முன்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி செயலாளர் செ.கஜேந்திரன் தலைமையில் கூடிய நூறு பேர்வரையிலானோர் அமைதியாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை அடக்கிக் கலைப்பதற்காகப் பெரும் எண்ணிக்கையான பொலிஸாரும் அதிரடிப் படையினரும் நகரில் களமிறக்கப்பட்டிருந்தனர். அதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது.

அந்த இடத்தில் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு நீதிமன்றத் தடையுத்தரவு உள்ளதெனக் கூறிய பொலிஸார் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன், பேச்சாளர் க.சுகாஸ் உள்ளிட்ட 7பேரைக்கைது செய்தனர். மற்றையவர்களைத் முரட்டுத்தனமாகத் தடியடி நடத்திக் கலைகத்தனர்.

பொலிஸார் தமது கட்சியைச் சேர்ந்தவர்களை பிடித்து இழுத்து ஆடைகளைக் கிழித்துப் பலவந்தமாகத் தமது வாகனங்களில் ஏற்றிச் சென்றனர் என்று முன்னணியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தக் களேபரங்களைத் தொடர்ந்து மேலும் தமது எதிர்ப்பைப் பதிவு செய்வதற்காக முன்னாள் நடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்ட மேலும் பலர் அங்கு கூடத்தொடகினர். பொலிஸாரும் அதிரடிப் படையினரும் அங்கு தொடர்ந்தும் முரட்டுத்தனத்தோடு குவிக்கப்பட்டிருப்பதால் இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரைக்கும் அங்கு பதற்றம் நிலவியது.

முன்னதாக நண்பலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கந்தர்மடம் பரமேஸ்வரா வளாகத்தின் முன்பாகக் கூடிய மாணவர்கள், பொதுமக்கள், சமயத்தலைவர்கள் சுதந்திர தினக் கொண்டாட்டங்களைக்கண்டித்து ஆர்ப்பாட்த்தில் ஈடுபட்டனர். சிறிய ஊர்வலம் ஒன்றையும் நடத்தினர். பதாகைகளைத் தாங்கியபடி பல்கலைக்கழக முன்றலில் கூடிய அவர்கள், பின்னர் பரமேஸ்வராச் சந்தி வரைக்கும் ஊர்வலமாகச் சென்று திரும்பினர்.

சுதந்திர தினத்தைக் கரிநாளாக அறிவித்து அன்றையதினம் தாம் தொடங்கிய வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பயணத்தின் இறுதியில் வெளியிட்ட தீர்மானங்கள் சில எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியபடி அவர்கள் இந்த ஊர்வலத்தை நடத்தினர்.

ஒற்றையாட்சி அரசமைப்புக்குட்பட்ட அனைத்துத் தீர்வுகளையும் நிராகரிக்கின்றோம், பொதுவாக்கெடுப்பு மூலமாக எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கவேண்டும் போன்ற வாசகங்கள் அந்தப் பதாகைகளில் எழுதப்பட்டிருந்தன.

## மைத்திரியின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிந்தவர் களை ஒன்றிணைத்த புதிய கூட்டணியில் களுத்துறை மாவட்டத்துக்கான வேட்புமனு ஒதுக்கீடு தொடர்பில் ஆராயும் கூட்டத்தில் ரெஜினோல்ட் குரே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் பங்கேற்றிருந்தார். அங்கு அவருக்கும் மாற்று கட்சி உறுப்பினர்கள் சிலருக்கும் இடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது. கெவிந்து குமாரதுங்கவுக்கும், ரெஜினோல்ட் குரேவுக்கும் இடையில் கடும் சொற்சமரும் மூண்டது.

சில தினங்களுக்கு முன்னர் இருதய சத்திர சிகிச்சை செய்திருந்த ரெஜினோல்ட் குரே, மேற்படி தர்க்கத்தால் உள ரீதியில் பாதிக்கப்பட்டார் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் நடந்து சில நாள்களிலேயே அவர் திடீரென உயிரிழந்தார். அவரின் இறப்புக்கு மாரடைப்பு எனக் காரணம் கூறப்பட்டது.

முன்னதாக 'ஹொலிஹொப்டர்' கூட்டணியில் இணைந்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி திடீரென ஒதுங்கி, தனி வழி செல்லும் அறிவிப்பை விடுத்தது. இதற்குப் பல்வேறு காரணங்களும் கூறப்பட்டன.

ஆனால் ரெஜினோல்ட் குரேயின் இறப்பையடுத்தே சு.க. முடிவை மாற்றியது என்று குறிப்பிட்டுள்ள அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன, ரெஜினோல்ட் குரே இறக்கவில்லை; அவரைக் கொலை செய்துவிட்டார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

மைத்திரியின் இந்த அறிவிப்பு விமல், டலஸ் உள்ளிட்ட தரப்பைக் கொதிப்படைய வைத்துள்ளது. இனிமேல் மைத்திரியை கூட்டணியில் இணைக்கக் கூடாது எனக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பலரும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

## யாழ்.மாநகர.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கடந்த புதன் கிழமை (08) மோட்டார் சைக்கிளில் பயணித்த போது, வீதியின் குறுக்கே சென்ற நாய் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானார். கீழே விழும்போது அவரது தலைக்கவசம் கழன்றமையால் தலையில் பலத்த அடி காயம் ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த அவர், இன்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்தில் மூளையில் ஏற்பட்ட கடுமையான சிதைவு மற்றும் குருதிக் கசிவு என்பன மூளை யின் செயற்பாடு களை கடுமையாகப் பாதித் ததன் விளைவாக, அவருக்கு சத்திர சிகிச்சை மற்றும் அதிதீவிர சிகிச்சை அளித்தும் பயனளிக்கவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.







## கரையொதுங்கின.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்த 3 திமிங்கலங்களங்களையும் உடற்கூறுபரிசோதனைக்கு உற்படுத்தப்பட உள்ளதாக கண்டகுழி வனஉயிரிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கரையொதுங்கிய திமிங்கலம் (ய்ஷ்யிளமி நிஜூழியிள) பைலட் வேல் என அழைக்கப்படும் வகையைச் சேர்ந்தவை. அவை ஏன் இப்படிப் பெரும் எண்ணிக்கையில் கரையொதுங்கின என்பது கண்டறியப்படவில்லை.

அன்மையில் கற்பிட்டி தழுவ பகுதியில் உயிருடன் புள்ளிச் சுறா ஒன்றும் கரையொதுங்கியிருந்தது. கடற்படையினர் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கிராம மக்கள் இணைந்து அதனைக் கடலுக்குள் மீண்டும் அனுப்பியிருந்தனர்



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## செய்யவேண்டியதை செய்வாரா ரணில்?

அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரை தொடர்பில் கருத்துத் தெரிவித்திருக்கும் ஜேவிபி தலைவர் அனுர குமார திஸநாயக்க, தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வாக ரணிலும், பிரதமர் தினேஸ் குணவர்த்தனவும் மகிந்த ராஜபக்சவும் என்ன தீர்வை முன்வைக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தட்டும் அதன் பின்னர் அந்தத் தீர்வு தொடர்பில் நாமும் இணைந்து ஆராயலாம் என்று கூறியிருக்கிறார். அதைவிடுத்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டங்களைக் கூட்டி எந்தப் பயனும் இல்லை, அத்தகைய கூட்டங்களால் இதற்கு முன்னரும் எந்தப் பயனும் ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அனுரவின் கூற்று மிகச் சரியானதும் முறையானதும்கூட. ரணில் விக்கிரமசிங்க இதற்கு முன்னர் ஒவ்வொரு தடவையும் கூட்டிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம், தெரிவுக்குழுக் கூட்டங்கள் மூலம் எந்தவொரு இணக்கப்பாடும் எட்டப்பட்டதில்லை. தொடக்கத்தில் இணக்கம் ஏற்படுவது போன்ற தோற்றப்பாட்டைக் காட்டும் கட்சிகளின் தலைவர்கள், ஒரு இறுதித் தீர்மானத்தை எட்டும் நிலையை அடையும்போது ஒவ்வொரு பக்கத்தால் இழுத்துக்கொண்டு ஓடி அதனைக் குழப்பிவிடுவார்கள். நல்லாட்சி என்று பெயரிடப்பட்ட ரணில், மைத்திரி கூட்டு ஆட்சியிலும் அதுதான் நடந்ததது.

இப்போதுகூட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அரசமைப் பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவேன் என்று வீரவசனம் பேசிய ரணில் விக்கிரமசிங்க, தங்களது எதிர்ப்பைப் பார்த்து பயந்துவிட்டார், பதுங்கிவிட்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கம்பன்பில கருத்துச் சொல்லும் வகையில்தான் நடந்துகொள்கிறார். அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அவர் 13 குறித்து தேவையற்ற சலசலப்பை ஏற்படுத்திவிட அதனைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு பிக்குள் இப்போது சன்னதமாடி வருகின்றனர். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இணக்கமில்லை. அதில் பேசப்பட்ட விடயங்களுக்கு அதற்கு வெளியிலும் கடுமையான எதிர்ப்பு என்கிற நிலையே தொடர்கின்றது.

எப்படிப் பார்த்தாலும் தமிழர்களுக்கு என்ன தீர்வு என்பதில் சிங்களக்கட்சிகள்தான் முதலில் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கின்றனர். தமிழ்த் தரப்பை எப்போதும் பேச்சுக்குவா என்று அழைப் பதைவிட்டுத்து தமிழர்களுக்கு என்ன தீர்வைத் தங்களால் அறுதியாகத் தரமுடியும் என்பதைச் சிங்களத் தலைவர்கள் முதலில் முடிவுசெய்யவேண்டும். அப்போதுதான் இந்தப் பிரச்சினைக்கு ஒரு சரியான தீர்வை எட்டமுடியும், அதை நோக்கி நகர முடியும்.

தமிழ்த் தலைவர்கள் ஒன்றாகப் பேச வரவேண்டும் என்று அறிவுரை கூறுவதைவிடுத்து ரணில் போன்றவர்கள் சிங்களத் தலைவர்களைக் கூட்டி இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த அவர்களின் கடைசித் தீர்மானத்தைக் கோரவேண்டும். அதைச் செய்வதற்கு மனமும் துணிவும் இருக்கிறதா ரணிலுக்கு?

# ஜனாதிபதியின் எல்லா முடிவுகளுக்கும் பொதுஜன பெரமுன ஆதரவளிக்காது!

### சாகர காரியவாசம் திட்டவட்டம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சகல தீர்மானங்களுக்கும் எம்மால் ஆதரவளிக்க முடியாது. நல்லாட்சி அரசாங்கத்தில் கூட அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிக்கப்படாத நிலையில், தற்போது அதற்கு முக்கியத்துவமளிப்பதற்கான காரணி தொடர்பில் ஆராய வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மேலும் பொதுஜன பெரமுன அதிகார பகிர்வை எதிர்க்கும் கட்சியல்ல. ஆனால் அதிகார பகிர்வு இன, மத, மொழி ரீதியில் வழங்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுஜன பெரமுன அதிகாரப் பகிர்வை எதிர்க்கும் கட்சியல்ல. ஆனால் அதிகார பகிர்வு இன ரீதியாகவோ, மொழி ரீதியாகவோ அல்லது மத ரீதியாகவோ வழங்கப்படுவதை நாம் எதிர்க்கின்றோம். அதிகாரம் பகிரப்பட வேண்டியது மக்களுக்காகும்.

13 ஆவது அரசமைப்பு திருத்தம் 35 ஆண்டுகளாக எமது அரசமைப்பில் காணப்படுகிறது. இந்தக் காலப்பகுதியில் ஆட்சி செய்த 7 ஜனாதிபதிகளில் எவருமே 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று எண்ணவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தில் கூட இவ்வாறானதொரு முயற்சி முன்னெடுக்கப்படவில்லை.

எனவே, கடந்த காலங்களில் ஏன் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது தொடர்பில் ஆராய வேண்டும். எம்மால் உடன்படக் கூடிய விடயங்களில் மாத்திரமே நாம் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்போம்.

ஜனநாயகம், இறையாண்மையைப் பாதுகாத்தல் மற்றும் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்கே நாம் பிரதானமாக எமது ஒத்துழைப்பை வழங்குவதற்கு இணங்கியுள்ளோம்.

எனவே ஆரம்பத்திலேயே இணக்கப்பாடு எட்டப்பட்ட விடயங்களைத் தவிர, ஜனாதிபதி கூறும் அனைத்து விடயங்களுக்கும் எம்மால் ஆதரவளிக்க முடியாது. - என்றார்.

# உள்ளூராட்சி நிறுவனங்களின் வளங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகின்றன

### பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரை 60 சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் பஃவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை உள்ளூராட்சி நிறுவணங்களின் வளங்களை துஷ்பிரயோகம் செய்யும் சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சட்டவிரோத பிரசாரத்தில் ஈடுபடும் உள்ளூராட்சிமன்ற வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்களுக்கு இலஞ்சம் கொடுப்பது தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

# மனிதப் பாவனைக்குத் தகுதியற்ற தேங்காய் எண்ணெய் இறக்குமதி?

வெளிநாடுகளால் நிராகரிக்கப்பட்ட மனித பாவனைக்குத் தகுதியற்ற கழிவுகளுடன்கூடிய அதிகளவிலான தேங்காய் எண்ணெய் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குறித்த சங்கத்தின் தலைவர் புத்திக டி சில்வா தெரிவிக்கையில், கடத்தல்காரர்களிடம் இருந்து பணத்தை பெற்றுக்கொண்ட அதிகாரிகள் இதை கருத்திற்கொள்ளாது செயற்படுகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் இந்தியா மற்றும் பிற அண்டை நாடுகளில் இருந்து மிகக் குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தொலைத்தொடர்பு கோபுரம் வேண்டாம் வாளைச்சேனையில் மக்கள் போராட்டம்



வாழைச்சேனை மத்திய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட செம்மண்ணோடை கூட்டுறவுச் சங்க வீதியிலுள்ள ஃபுட் சிட்டி கட்டடத்தில் அமைக்கப்பட்டு வரும் தொலைத்தொடர்பு கோபுரத்தை அகற்றக்கோரி இன்று சனிக்கிழமை அந்தப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் செறிந்து வாழும் குறித்த பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதால் பொதுமக்களுக்கு புற்றுநோய் மற்றும் சரும நோய்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவித்தே இந்த எதிர்ப்பு போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தொலைத்தொடர்பு கோபுரம் எழுப்பப்படும் ஃபுட் சிட்டி கட்டடத்துக்கு முன்னால் ஒன்றுதிரண்ட மக்கள் வீதியை மறித்து வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் க.கமலநேசன், வாழைச்சேனை மத்தி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ. ரமீஸா, உதவித் திட்டப் பணிப்பாளர் எச்.எம்.எம்.றுவைத், பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல்.ஏ.கபூர் ஆகியோர் வந்தடைந்தனர்.

அந்த அதிகாரிகளிடம் போராட்டக்காரர்கள் தொலைத்தொடர்பு கோபுரப் பணிகளை உடன் நிறுத்துமாறு கோரிக்கை விடுத்து மனுவைக் கையளித்தனர். அத்துடன், இது தொடர்பில் ஆராய்வதற்காக தொலைத்தொடர்பு கோபுரத்தை பொருத்தும் பணிகளை ஒரு வாரத்துக்கு இடைநிறுத்துமாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஃபுட் சிட்டி உரிமையாளருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

# அமெரிக்கா மீது பறந்த மர்மப் பொருள் வான்படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டது



அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்தின் வான் பரப்பில் பறந்துகொண்டிருந்த கார் அளவுள்ள மர்மப் பொருள் ஒன்று வான்படையின் எவ்-22 சண்டை வானூர்தியினால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

சிறிய கார் ஒன்றின் அளவுள்ள இந்த மர்மப்பொருள் சைட்விண்டர் ஏவுகணை மூலம் சுட்டு வீழ்த்தப்பட்டது என்று அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகனின் பிரிகேடியர் ஜெனரல் பட்றிக் ரைடர் தெரிவித்தார்.

"அது யாருக்குச் சொந்தமானது என்பது எமக்குத் தெரியாது" என்று தெரிவித்தார் அமெரிக்க அதிபர் அலுவலகமாக வெள்ளை மாளிகையின் பேச்சாளர் ஜோன் கிர்பி. அந்த மர்மப் பொருள் எந்த இடத்திலிருந்து தனது பயணத்தைத் தொடங்கியது என்பதும் தெளிவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒரு வார காலத்திற்குள் அமெரிக்கா தனது வான் பரப்பில் சுட்டு வீழ்த்திய இரண்டாவது பொருள் இது. ஏற்கனவே தென் கரோலினா மாநிலத்தில் 40 ஆயிரம் உயரத்தில் பறந்துகொண்டிருந்த பலூன் ஒன்று இதேபோன்று எவ் 22 சண்டை வானூர்தியால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

அந்த பலூன் சீனாவின் உளவுக் கருவி என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியது. ஆனால் காலநிலை அவதானிப்புக்காக ஏவப்பட்ட அந்த பலூன் மோசமான காலநிலை காரணமாகவும் அதனைத் தொலைவிலிருந்து கட்டுப்படுத் துவதற்கான திறன் போதாமை காரணமாகவும் தமது கட்டுப்பாட்டை இழந்து வழிதவறி அமெரிக்காவிற்குள் நுழைந்துவிட்டது என்று சீனா கூறியிருந்தது.

அதன் பின்னரும் மாசி 4ஆம் நாள் அந்த பலூனை அமெரிக்க வான்படை சுட்டு வீழ்த்தியது. வெள்ளிக்கிழமை சுட்டுவீழ்த்தப்பட்ட பொருள் என்னஎன்பதைத்தெளிவாகக் கூற பென்ரகனும் வெள்ளை மாளிகையும் மறுத்துவிட்டன. அந்த மர்மப் பொருள் சீன பலூனைவிட மிகச் சிறியது என்று மட்டுமே தெரிவித்தனர்.

முழுதாக ஒரு நாள் கடந்த பின்னரும் அந்தப் பொருள் என்னது என்கிற ஊகத்தைக் கூட வெளியிட அமெரிக்க அதிகாரிகள் மறுப்பது, அது என்னவாக இருக்கும் என்கிற ஆர்வத்தைப் பெருமளவில் கிளப்பியுள்ளது. அனுபவமுள்ள அமெரிக்க வான்படை வானோடிகளுக்கும் புலனாய்வாளர்களுக்கும் கூட அடையாளப்படுத்த முடியாமல் போயிருக்கக்கூடிய அப்படிப்பட்ட அந்தப் பொருள் என்ன என்பது தொடர்பான வாதங்கள் அங்கு அனல் பறக்கின்றன.

அந்த மர்மப் பொருள் வியாழக்கிழமை முதன் முதலில் தரை ராடர்களில் தென்பட்டது. உடனடியாக எவ் 35 வானூர்திகள் விசாரணைக்காக அனுப்பிவைக்கப்பட்டது. அப்போது அந்த மர்மப் பொருள் 40 ஆயிரம் அடி உயரத்தில் வடகிழக்கு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது. அது பயணிகள் வான் போக்குவரத்துக்கு ஆபத்தானது என்று கருதப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கனடா எல்லைக்கு அருகில் உள்ள அலாஸ்காவின் உறைபனியால் மூடப்பட்டுள்ள அமெரிக்க நிலப்பரப்பின் மீது அந்த மர்மப் பொருள் சுட்டுவீழ்த்தப்பட்டது.



## "என் கண்களும் மனமும் கலங்கின"

### துருக்கி ஒளிப்படக்கலைஞரின் அனுபவம்

துருக்கி -சிரிய பூகம்பத்தின் கோர முகத்தை நாளும் வெளியாகும் ஒளிப்படங்கள் நமக்கு உணர்த்தி வருகின்றன. அந்த வகையில் உலக மக்களின் மனதை உடைக்கும் புகைப்படத்தை எடுத்த தனது அனுபவத்தை பகிர்கிறார் துருக்கிய ஒளிப்படக் கலைஞர் அல்தான்.

தனது 40 வருட ஒளிப்படத் தொழிலில் தான் எடுத்த பிற ஒளிப்படங்களுடன் இதனை ஒப்பிட முடியாது என்கிறார் அல்தான்.

துருக்கி - சிரிய எல்லையில் பூகம்பம் ஏற்பட்டத்தைத் தொடர்ந்து அங்காராவிலிருந்து தெற்கு துருக்கிக்கு விரைந்து சென்றேன். நான் சென்ற வழி முழுவதும் அடுக்குமாடி குடியிருப்புகள் சரிந்துகிடந்தன.

சரிந்த கட்டடங்களில் சிக்கியுள்ள உறவினர்கள் வெளியே வருவார்களா என்று மக்கள் கண்ணீருடன் காத்திருந்தனர். அப்போதுதான் அந்த மனிதரை நான் பார்த்தேன். அவர் ஆரஞ்சு நிற கோர்ட் அணிந்து உட்கார்ந்திருந்தார். அவரது கைகளை உற்று நோக்கும்போதுதான் தெரிந்தது அவர் இடிபாடுகளில் சிக்கிய ஒருவரது கைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருந்தார். அப்போதுதான் அந்த ஒளிப்படத்தை நான் எடுத்தேன்.

அந்த நபரின் பெயர் மிசுத், இடிபாடுகளில் அவர் பிடித்திருக்கும் கை அவரது 15 வயது மகள் இர்மாக்குடையது. பூகம்பத்தால் படுக்கையிலே இக்மார்க்கின் உயிர் பறிபோகி இருக்கிறது. அந்த நிலையில்தான் இக்மார்க்கின் கைகளை மிசுத் பிடித்திருந்தார்.

அவரிடம் நான் உங்களை புகைப்படம் எடுக்கலாமா என்று கேட்டேன் அவர் எடுத்து கொள்ளுங்கள் என்றார். அவர் உணர்வற்று இருந்தார். அந்தக் காட்சியை புகைப்படமாக எடுக்கும்போது என் கண்களும், மனமும் கலங்கியது. அந்த சிறுமி நீண்ட நேரம் அந்த இடிபாடுகளில் இருந்தார். யாரும் அங்கு வரவில்லை. அடுத்த நாள் அந்த இடத்திற்கு நான் சென்று பார்க்கும்போது இருவரும் அங்கு இல்லை என்று கூறி இருக்கிறார் அல்தான்.

துருக்கி - சிரிய எல்லையில் திங்கட்கிழமை அடுத்தடுத்து ஏற்பட்ட இரு பயங்கர பூகம்பம் ரிச்டர் அளவில் 7.8, 7.5 என்ற அளவில் பதிவானது. லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

## நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் 23,700ஐத் தாண்டியும் நகர்கிறது

கடும் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட துருக்கி மற்றும் சிரியாவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23 ஆயிரத்து 700ஆக அதிகரித்துள்ளது. பாதிப்பு ஏற்பட்டு 5 நாட்களின் பின்னரும் அங்கு இடிபாடுகளுக்குள் இருந்து பலர் உயிருடன் மீட்கப்பட்டுவருகின்றார்கள்.

இந்தப் பேரிடரை எதிர்கொள்ளும் அதிகாரிகள் இன்னும் விரைவாகச் செயற்படவேண்டும் என்று துருக்கி அதிபர் அதிகாரிகளைக் கடிந்துகொண்டிருக்கிறார். பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு அரச உதவிகள் எவையும் வந்து சேரவில்லை என்றும் இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டுள்ளவர்களை மீட்பதற்குப் போதிய உபகரணங்கள் இல்லை என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்ற பின்னணியில் அதிபர் அதிகாரிகளை விரைந்து செயற்படக் கோரியிருக்கிறார்.

துருக்கி, சிரியா இரு நாடுகளிலுமே உறைய வைக்கும் கடும் குளிர் நிலவும் நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் போதிய உணவு கிடைக்காமல் அல்லாடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இரு நாடுகளிலுமே மக்கள் கோபமடைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சிரிய அதிபர் அல் அசாத் முதல் தடவையாகப் பயணம் செய்து பாதிப்புக்களை நேரில் பார்வை யிட்டார்.

இந்த நிலநடுக்கம் உலகில் நிகழ்ந்த மிகப் பெரும் பேரிடர்கள் வரிசையில் தற்போது 7ஆவது இடத்தில் இருக்கின்றது. 6ஆவது இடத்தில் ஜப்பானில் 2011ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலை இடர் உள்ளது. அதில் 31 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். துருக்கி சிரிய நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை விரைவில் அந்த இடத்தை எட்டிப் பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகிலேயே மிகப் பெரிய தேடுதல் மற்றும் உதவிப் படைகளை நாம் வைத்திருக்கின்றபோதும் நாம் எதிர்பார்க்கின்ற வேகத்தில் மீட்புப் பணிகளைச் செய்ய முடியவில்லை என்று கவலை தெரிவித்துள்ளார் துருக்கிய அதிபர்.



## சூரியனின் ஒரு துண்டு உடைந்தது அறிவியலாளர்கள் பெரும் கலக்கம்

சூரியனின் ஒரு பகுதி திடீரென உடைந்து, அதனால் சூரியனின் வட துருவத்தில் ஒரு பெரிய நெருப்பு சூறாவளி ஏற்பட்டு, அது மேற்பரப்பில் சுழன்று வருவதால் அறிவியலாளர்கள் கலக்கமடைந்துள்ளனர்.

சூரியன் எப்போதுமே தன்னகத்தே பல்வேறு சுவாரஸ்யங்கள், புதிர்களை உள்ளடக்கிய கிரகமாகவே இதுவரை இருக்கிறது. அவ்வப்போது சூரியனைப் பற்றி சில விந்தையான வியங்களையும் அறிவியல் அறிஞர்கள் நமக்குப் பகிர்வது உண்டு.

சூரியனைப் பற்றி தொடர்ச்சியாக அறிஞர்கள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அவ்வப்போது சூரியனில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய சில அரிய தகவல்கள், படங்களை 'நாசா' பகிர்வது உண்டு. சூரியனின் மேலே பாம்பு போல் நெளிந்து ஓடிய புயல், சிரிப்பதுபோல் காட்சியளித்த சூரியன் என பல புகைப்படங்கள் இதற்கு முன் பார்வைக்குக் கிடைத்தது உண்டு.

இப்போதும் ஒரு வியம் சூரியனைப் பற்றி வெளிவந்துள்ளது. சூரியனின் மேற்பரப்பிலிருந்து ஒரு பெரிய துண்டு உடைந்துவிட்டதாகவும், அது அதனுடைய வட துருவப் பகுதியில் ஒரு பெரும்புயலைப் போல் சுற்றி வருவதாகவும் அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது எப்படி நடந்திருக்கும் என்று அறிவியலாளர்கள் ஒருபுறம் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்க, இன்னொரு புறம் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி வாயிலாக பதிவு செய்யப்பட்ட அந்தக் காட்சியை விண்வெளி ஆராய்ச்சியாளர் கலாநிதி தமிதா ஸ்கோவ் தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

அந்தப் பதிவில் அவர் போலார் வோர்டக்ஸ் பற்றிதான் எல்லாப் பேச்சும் நடைபெறுகிறது. சூரியனின் வடக்குப் பக்கத்தின் மேற்பரப்பில் ஒரு பெரிய துண்டு உடைந்துவிட்டது. அது இப்போது போலார் வார்டக்ஸாக சூரியனின் வட துருவத்தில் சுற்றி வருகிறது. இதன் தாக்கத்தை பற்றிதான் ஆராய்ந்து வருகிறோம் என்று எழுதியுள்ளார்.

சூரியனில் அவ்வப்போது இவ்வாறான சூறாவளிகள் ஏற்படும். இந்த சூரியப் புயலால் தகவல் தொழில்நுட்ப தொடர்புகள் பாதிக்கப்படும். ஆனால், இப்போது சூரியனின் வடக்குப் பகுதியில் அதிலிருந்து ஒரு துண்டே உடைந்து, அதனால் பெரிய அளவில் சூறாவளி எழுந்து, அது சூரியனின் வட துருவத்தின் மேலே நெருப்பாய் சுழன்று கொண்டிருக்க, அது பூமிக்கு என்னவிதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற அச்சத்தில் அறிவியலாளர்கள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக கடினமான தீர்மானங்களை எடுப்போம்

## ஜனாதிபதி பகிரங்கமாகத் தெரிவிப்பு



பிரபலமான தீர்மானங்களால் ஒரு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்பதால், நாட்டின் எதிர்காலத்திற்காக அனைத்து அரசியல் தலைவர்களும் பிரபலமற்ற ஆனாலும் நாட்டுக்குச் சாதகமான கடினமான தீர்மானங்களை எடுப்பார்கள் என நான் நம்புகின்றேன்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வரி விதிப்பு செய்யப்பட்டது நாட்டு மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை அறியாமல் அல்ல என்றும், நாட்டின் பொருளாதாரத்தைக் கொண்டு நடத்தும் நோக்கிலேயே அத்தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும், அதேபோல் வெகு விரைவில் நாட்டு மக்களுக்கு நிவாரணத்தை வழங்க முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையில் முதன்முறையாக பொருத்தப்பட்ட கூஷிதீற்ஜ–ழிஷ் நூஷழிஜ– ஷ்10 மோட்டார் வாகனத்தைச் சந்தையில் அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் பொருளாதாரம் வெகு விரைவில் மீண்டு விடும் என்ற நம்பிக்கை இத்தகைய முதலீடுகளால் உறுதி செய்யப்படுகின்றது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.


அத்துடன் கூஷிதீற்ஜ–ழிஷ் நூஷழிஜ– ஷ்10 வாகனத்தைச் சந்தைப்படுத்துவதன் மூலம் வெளிநாடுகள் எமது நாட்டின் மீது வைத்துள்ள நம்பிக்கை மென்மேலும் உறுதி செய்யப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

இலங்கையிலுள்ள அபான்ஸ் ஒட்டோ நிறுவனம் மற்றும் கொரியாவின் ஹுன்டாய் மோட்டார் நிறுவனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்த மோட்டார் வாகனம் சீதுவை பிரதேசத்தில் அமைந்துள்ள நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தொழிற்சாலையொன்றில் பொருத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டில் வாகனங்களைப் பொருத்துதல் மற்றும் வாகன உதிரிபாகங்களை உற்பத்தி செய்தல் ஆகிய துறையில் இந்நிகழ்வு ஒரு முக்கிய மைல்கல்லாகும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன, இலங்கைக்கான கொரிய தூதுவர் சந்துஷ் வூன்ஜின் ஜியொங், முதலீட்டுச் சபையின் தலைவர் தினேஷ் வீரக்கொடி, அபான்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை, ரெசி பெஸ்டொன்ஜி உள்ளிட்ட பலர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வழக்கம்போல காசு கேட்கிறார் விக்னேஸ்வரன்



எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்குத் தனது கட்சிக்கு நிதி வழங்குமாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணித் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசிய சிந்தனையும், ஆற்றலும், தூய கரங்களும் கொண்ட இளையோர்களைக் கொண்ட தனது வேட்பாளர்களை வெற்றிபெறச்செய்யும் முயற்சிக்கு முழுமையான ஆதரவினை வழங்குமாறு அவர் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகுந்த நிதி நெருக்கடியின் மத்தியில் அநாவசியமான செலவுகளைத் தவிர்த்து எதிர்வரும் தேர்தலை முற்றுமுழுதாக மக்களை நம்பி எதிர்கொள்வதாக தெரிவித்துள்ள அவர், சில அவசியமான செலவுகளை செய்வதற்கான நிதி உதவிகளை முடிந்தளவு செய்துதவுமாறு நிலத்திலும் புலத்திலும் உள்ள மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். காலாகாலமாக தமிழ் அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வரும் கட்சிகள் தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷைகளை வென்றெடுப்பதில் தோல்வியைத் தழுவியுள்ளன, அதனால் தமிழ் மக்களுக்கான அரசியலை முன்னெடுத்துச்செல்வதற்கு இளையோர்களைத் தயார்படுத்தி அவர்களின் கைகளில் அரசியலை ஒப்படைக்கும் தருணம் வந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ள விக்னேஸ்வரன், அதன் காரணமாகவே நூற்றுக்கணக்கான இளையோர்களை எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் களம் இறக்கியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தேர்தலில் பரப்புரைகளுக்கு உதவும் வகையில் இயன்றளவு நிதி உதவிகளை அவர்களுக்கு வழங்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் பரப்புரைச் செலவுகள் மிகவும் அதிகமாக இருப்பதால் புலம்பெயர் நாடுகளிலும் உள்நாட்டிலும் வாழும் நண்பர்கள், தனது மாணவர்கள், உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் தம்மால் இயன்றளவுக்கு நிதி உதவி செய்ய வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

தேர்தல் நேரத்தில் மக்களிடம் பணம் கேட்பதை விக்னேஸ்வரன் இதற்கு முன்பும் செய்துள்ளார்.

# விக்கி – சண்டியர் விமல் – இனவாதி

## இருவரும் நிறுத்தவேண்டும் என்கிறார் டயனா கமகே!



நாட்டில் சிங்கள – தமிழ் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமாயின் ஆங்கில மொழியை அரச கரும மொழியாக அறிவிக்க வேண்டும்.

அப்போது எவரும் முரண்பட்டுக் கொள்ளமாட்டார்கள். விக்னேஸ்வரன் சண்டித்தனத்தையும், விமல் வீரவன்ஸ இனவாதத்தையும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என சுற்றுலாத்துறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கைப்பிரகடன உரை மீதான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முன்னிலைப்படுத்தி நாட்டில் இனவாத முரண்பாடுகளைத் தோற்றுவிப்பது வெறுக்கத்தக்கது.

13 அல்லது 13 பிளஸ் என்ற பிரச்சினைகள் எமது நாட்டுக்கு வேண்டாம். நாம் அனைவரும் இலங்கையர்களாக வாழ வேண்டும்.

விக்னேஸ்வரன் சண்டித்தன கதைகளைக் கைவிட வேண்டும். விமல் வீரவன்ஸ போன்றோர் இனவாதத்தை தூண்டுவதை நிறுத்த வேண்டும்.

சண்டித்தனமான பேச்சுக்களாலும், இனவாத செயற்பாடுகளாலும் 30 வருட கால யுத்தம் தோற்றம் பெற்றது.

அதன் தாக்கமே பொருளாதாரப் பாதிப்பாக உருவெடுத்துள்ளது. பொருளாதாரத் தாக்கம் அனைத்து இன மக்களையும் ஆட்டிப்படைக்கிறது. வடக்கில் அரச கரும மொழியாகத் தமிழ் மொழி அமுலாக்கப்படுவதாக விமல் வீரவன்ஸ கூறுகின்றார்.

இலங்கையில் சிங்கள – தமிழ் பிரச்சினைக்கு தீர்வுகாண இருக்கும் ஒரே வழி அரச கரும மொழியாக ஆங்கில மொழியை அறிவிப்பதே.

அனைத்து நாடுகளிலும் அனைத்து இடங்களிலும் இன்று ஆங்கில மொழியே உள்ளது. எனவே இலங்கையின் அரச கரும மொழியாக ஆங்கில மொழியை அறிவிக்க வேண்டும்.

இலங்கையின் அரச கரும மொழியாக ஆங்கில மொழியை அறிவித்தால் சிங்கள, தமிழ் பிரச்சினையும் தீர்ந்து விடும்.

நாடும் அனைத்து வழிகளிலும் முன்னேறும். எவரும் மொழியுரிமை எனக் குறிப்பிட்டுக்கொண்டு முரண்பட்டுக்கொள்ள மாட்டார்கள்.

அதேவேளை தனது நாட்டுக்காக உயிரைக்கொடுத்து போராடும் உக்ரைன் நாட்டு ஜனாதிபதி ஜெலென்ஸ்கியாகவே நான் எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பார்க்கின்றேன்.

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொண்ட போது அரசாங்கத்தை ஏற்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கு பலமுறை அழைப்பு விடுத்தார். ஆசை, ஆனால் பயம் என்பதால் அவர் அரசாங்கத்தை ஏற்கவில்லை.

நெருக்கடியான சூழலில் நாட்டு மக்களைப் பாதுகாப்பவரே உண்மையான தலைவர், சந்தர்ப்பாதிகள் உண்மையான தலைவர் அல்லர், நாட்டு மக்கள் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும்.

– என்றார்.

# தேர்தலைப் பிற்போட அரசு எடுத்த முயற்சிகள் தோல்வி!

## அநுர சுட்டிக்காட்டு



வெற்றி பெறுவதாக இருந்தால் தேர்தலை நடத்துவதும், தோல்வியடைவதாக இருந்தால் தேர்தலை நடத்தாமல் இருப்பதும் உண்மையான ஜனநாயகம் அல்ல.

தேர்தலைப் பிற்போட ஜனாதிபதி உட்பட அரசாங்கம் எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமையை உயர்நீதிமன்றம் பாதுகாத்துள்ளமைக்கு நீதித்துறைக்கு எமது உயரிய கௌரவத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமாயின் நாட்டு மக்களின் ஆதரவுடன் அரசாங்கம் ஒன்று தோற்றம் பெற வேண்டும். சோமாலிய கடற்கொள்ளையர்கள் கப்பலைக் கைப்பற்றியுள்ளதைப் போன்று அரசாங்கத்தை கைப்பற்றியுள்ளவர்களால் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு போதும் தீர்வு காண முடியாது. அரசாங்கம் மக்களாணைக்கு அச்சமடைந்து செயற்படுகிறது.

தேர்தலை நடத்தாமல் பலவந்தமான முறையில் அதிகாரத்தில் இருக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. அரசமைப்பின் பிரகாரம் நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட அரசாங்கம் மேற்கொள்ளாத முயற்சிகள் ஏதும் கிடையா.

நாடாளுமன்ற சட்டத்தின் ஊடாகத் தேர்தலை பிற்போட அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி தோற்கடிக்கப்பட்டது. மறுபுறம் அரச நிர்வாக சேவைகள் அமைச்சின் செயலாளர் ஊடாக வேட்பு மனுத்தாக்கல் பொறுப்பேற்றலுக்கு தடையேற்படுத்தப்பட்டது. தேர்தல் நடவடிக்கைகளுக்கு எரிபொருள் விநியோகிக்க வேண்டாம் எனக் குறிப்பிட்டது. இவ்வாறு மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோற்கடிக்கப்பட்டன.

வெற்றிபெறும் சூழல் காணப்படும் போது தேர்தலை நடத்துவதும், தோல்வியடையும் போது தேர்தலை நடத்தாமல் இருப்பதும் உண்மையான நோக்கம் அல்ல. காலத்துக்குக் காலம் தேர்தல் முறையாக நடத்தப்பட வேண்டும். தமக்கான அரசாங்கத்தைத் தெரிவுசெய்ய நாட்டு மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதுவே உண்மையான ஜனநாயகம்.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமை உயர்நீதிமன்றம் பாதுகாத்துள்ளது. அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளுக்கு நீதிமன்றத்தின் ஊடாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை உயரிய கௌரவத்தின் ஊடாக மதிக்கிறோம்.

- என்றார்.



# தேர்தல்கள் இடம்பெறும் எவ்வித ஐயமும் இல்லை

## ஜீ.எல்.பீரிஸ் திட்டவட்ட அறிவிப்பு

திட்டமிட்ட தினத்தில் தேர்தலை நடத்துமாறு நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு பிரஜைகளின் வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தியுள்ளது.

தேர்தல் இடம்பெறுமா இல்லையா என்ற வாத பிரதிவாதங்கள் நிறைவுக்கு வந்துள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தேர்தலை திட்டமிட்டவாறு நடத்துமாறு வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பிரஜைகளுக்கு காணப்படும் வாக்களிக்கும் உரிமை இந்த நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாம் தேர்தலுக்கு தயாராகிக் கொண்டிருப்பதைப் போன்று மக்களும் தேர்தலுக்குத் தயாராக வேண்டும். மார்ச் 9 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அதற்கமைய சட்டத்தின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழு நிச்சயம் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலுக்கான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதாக ஆணைக்குழு நீதிமன்றத்திடம் உறுதியளித்துள்ளது.

எனவே தேர்தல் இடம்பெறுமா இல்லையா என்ற வாதப் பிரதிவாதங்கள் நிறைவுக்கு வந்துள்ளன.

எவ்வாறிருப்பினும் தேர்தலுக்கு நிதி இல்லை என்று கூறுகின்றமை பாரதூரமானதொரு விடயமாகும். ஜனநாயக நாடொன்றில் இவ்வாறு தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லை என்று எவராலும் கூற முடியாது.

20 கோடி ரூபா செலவில் சுதந்திரதினத்தை நடத்துவதற்கும் , 37 இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பதற்கும் , மேலதிகமாக இரு அமைச்சரவை அமைச்சர்களை நியமிப்பதற்கும் அரசாங்கத்திடம் பணம் இருக்கிறது. ஆனால் மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்கு பணம் இல்லை என்கிறது. இது அடிப்படை யற்றதாகும். – என்றார். இதே வேளை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிக்கையில் –

நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற ரீதியில் நீதிமன்றத்துக்கு நன்றி கூறுகின்றோம். தேர்தல் என்பது அடிப்படை உரிமையாகும்.

அதன் அடிப்படையில் நீதிமன்றம் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதை நாம் ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தி வந்தோம். எமது கோரிக்கைக்கு ஏற்ப நீதிமன்றத்தால் மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இது மகிழ்ச்சியளிக்கிறது. – என்றார்.

# இந்துக் குருவோ மௌலவியோ அரசமைப்பை எரித்திருந்தால்...

## இடித்துக்காட்டுகிறார் சாணக்கியன்



பௌத்த பிக்குகளைப் போல் இந்து குரு அல்லது முஸ்லிம் மௌலவி அரசமைப்பை தீயிட்டு எரித்திருந்தால் அவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பார்கள். பிக்குகளுக்கு அரசியல் சுதந்திரம் உள்ளதால் அவர்கள் அரசமைப்பை நடைமுறைப்படுத்த வேண்டாம் என போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

இனவாதத்தை மூலதனமாகக் கொள்ளும் இனவாதிகள் தற்போது 13 ஆவது திருத்தத்தைக் கையில் எடுத்து இனவாதப் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளார்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரை மீதான விவாதத்தி கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச தலைவர் என்ற ரீதியில் முழு நாட்டுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக செயற்பட வேண்டும். அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் நடைமுறைக்கு சாத்தியமற்றதாக உள்ளது. பொருளாதார மற்றும் சமூகக் கட்டமைப்பில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் திட்டம் ஏதும் கொள்கை பிரகடனத்தில் உள்ளடக்கப்படவில்லை.

இலங்கையில் வாழும் எவருக்கும் சுதந்திரம் இல்லை என்பதால் 75 ஆவது சுதந்திர தினத்தை கறுப்பு சுதந்திரமாக அனுஷ்டித்தோம். தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகத்தினர் அனைவரும் ஒன்றிணைந்து 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தை பெற்றுக்கொண்டனர். ஆங்கிலேயர் சிங்கள பெரும்பான்மை சமூகத்திடம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைக் கையளித்து சென்றார்கள்.

சிங்கள அரச தலைவர்களின் தவறான நிர்வாகத்தால் நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. இதனை வெளிப்படுத்தும் வகையில் தான் 75 ஆவது சுதந்திர தினத்தை கறுப்பு சுதந்திரமாக அனுஷ்டித்தோம். சிங்கள சமூகத்தினருக்கு பொருளாதார சுதந்திரம் தற்போது இல்லை என்பதால் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

பௌத்த பிக்குகள் நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் 13 ஆவது திருத்த நகல்களை தீயிட்டார்கள். இவர்களைப் போல் இந்து குருக்கள் அல்லது முஸ்லிம் மௌலவி செயற்பட்டிந்தால் அவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டதின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பர். பௌத்த பிக்குகளுக்கு அரசியல் சுதந்திரம் உள்ளது என்பதால் அவர்கள் அரசமைப்பை எரிக்கிறார்கள்.

ராஜபக்சர்களின் முதுகில் ஏறி சவாரி செய்தவர்கள் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள பின்னணியில் இனவாதத்தை பிரசாரமாக மேற்கொள்ள 13 ஆவது திருத்தத்தைக் கையில் எடுத்துள்ளார்கள். 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக இனவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. தற்போது 13 ஆவது திருத்தம். ஆகவே சிங்கள மக்கள் இந்த உண்மையை விளங்கிக்கொள்ள வேண்டும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் கருத்துரைக்க முன் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும். – என்றார்.



# சஹ்ரானுக்கு சிலையும் வேண்டும் என்பார்கள்!

## சங்கை ஊதிக் கெடுக்கும் வியாழேந்திரன்

பள்ளிவாசலை விடுவிக்கக் கோரி போராட்டம் நடத்துகின்றனர். இவ்வாறு செயற்படுபவர்கள் இன்னும் சில தினங்களில் சஹ்ரானுக்கு சிலை வைக்கவேண்டும் என்றும் கூறுவார்கள் என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

சஹ்ரான் அவமானச் சின்னம். பள்ளிவாசலை இடித்து தரை மட்டமாக்க வேண்டும் என்று கூறியவர்கள் இன்று பள்ளிவாசலை விடுவிக்கக் கோரி போராட்டம் நடத்துகின்றனர்.

இவ்வாறு செயல்படுபவர்கள் இன்னும் சில தினங்களில் சஹ்ரானுக்கு சிலை வைக்க வேண்டும் என்றும் கூறுவார்கள் என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஏப்ரல் 21 சஹறான் தலைமையிலான ஈஸ்டர் குண்டு தாக்குதலில் மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் உட்பட பல தேவாலயங்கள் மீது மிலேச்சத்தனமான குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு பலர் உயிரிழந்தனர்.

சஹ்ரான் கைவசம் இருந்த பள்ளிவாசலைப் பாதுகாப்பு தரப்பினர் தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர்.

ஆனால், அந்தப் பள்ளிவாசலை மீளவும் மக்களிடம் ஒப்படைக்கக்கோரி காத்தான்குடியில் ஒரு சில சிவில் சமூக அமைப்பும், அரசியல் தலைவர்கள் சேர்ந்து கடை அடைப்புடன் போராட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

ஆனால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது காத்தான்குடியில் உள்ள சிவில் அமைப்புகள், சில அரசியல் தலைவர்கள் கூறினார்கள்.

சஹ்றான் அவமான சின்னமான பள்ளிவாசலை இடித்து தரை மட்டமாக்க வேண்டும் என்று, தாக்குதல் நடந்து இன்று மூன்று வருடம்கூட ஆகவில்லை தற்போது பள்ளி வாசலை விடுவிக்க கோரி போராட்டம் நடத்துகின்றனர்.

இவ்வாறு செயற்படுபவர்கள் இன்னும் சில தினங்களில் சஹ்றானுக்கு சிலை வைக்க வேண்டும் என்றும் கூறுவார்கள் இதுதான் யதார்த்த உண்மை.

ஓட்டமாவடியிலே வடக்கு, கிழக்கு இணையக்கூடாது ஒரு சிங்கள அரசாங்க அதிபரை நியமிக்க வேண்டும் என்று ஒரு பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் இனவாதத்தைக் கக்கிக் கொண்டு வருகின்றார்.

இன்று பல பகுதிகளில் தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன. பல ஆலயங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் மாறி மாறி கருத்துக்களை தெரிவித்து வருகின்றார்கள்.

13 ஆவது திருத்தச் சட்டம் எரிக்கப்பட்டமை ஒரு மோசமான செயற்பாடு. இந்த ஆட்சியாளர்கள் ஒரு இனவாதப் போக்குடனே நடந்து கொண்டிருக்கின்றார்கள் .

ஏதாவது திருத்தச் சட்ட நகல் சட்டம் நிறைவேற்றப்படும் போது நாடகமாடும் நிலையே காணப்படுகின்றது. கடந்த கால வரலாறுகளை எடுத்துக்கொண்டால் மாறி மாறி வந்த ஆட்சியாளர்கள் சந்திரிகா அம்மையார் தொடக்கம் இன்றுள்ள ரணில் விக்ரமசிங்க வரைக்கும் தமிழர்களுடைய தீர்வு விடயத்தில் ஏமாற்றிக்கொண்டே வருகின்றார்கள்.

இவர்களது கபட நாடகங்கள் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் இரண்டு தரப்பிலும் எதிர்ப்பு இருக்கின்றது. சிங்கள பேரினவாத அரசியல்வாதிகளும், இனவாதப் பிக்குகள் மற்றும் முஸ்லிம் மதவாத தரப்பினரும் இந்த வடக்கு, கிழக்கு இணைப்பை எதிர்க்கின்றார்கள். – என்றார்.

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு எமது ஆட்சியில் தண்டனை நிச்சயம்

## சஜித் அணி தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியில் ஆட்சியில், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மையான சூத்திர தாரிகள் இன் னும் கண்டுபிடிக்கப்பட வில்லை; அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவில்லை. எமது ஆட்சியில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும். சரத் பொன்சேகா இதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டு குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள். அதுமட்டுமல்ல, போதைப் பொருள் வியாபாரிகள், ஊழல்வாதிகள் எல் லோருக்கும் தண்டனை வழங்கப்படும். சஜித் பிரேமதாஸ சொல்வதைச் செய்பவர். அவர் நிச்சயம் இதைச் செய்வார். அவர் ஏற்கனவே இந்த வாக்குறுதியை மக்களுக்கு வழங்கியுள்ளார் – என்றார்.

# வெறும் வாய்வீச்சு மட்டுமே எதிர்க்கட்சியிடம் உள்ளது!

## பிரதமர் தினேஸ் சாட்டை



நாட்டின் பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு காண எதிர்க்கட்சியிடம் வெறும் வாய்வீச்சு மட்டுமே உள்ளது. இதுதொடர்பில் அவர்களிடம் எந்த உறுதியான வேலைத் திட்டமும் கிடையாது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இரண்டாவது தினமாக இடம்பெற்ற ஜனாதிபதியின் அரச கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் சுற்றுலாத்துறை முன்னேற்றமடைந்து அந்நியசெலாவணி நிலைமை சுமுகமாகி வருகின்றமை சர்வதேசம் இலங்கை மீது கொண்டுள்ள நம்பிக்கையின் வெளிப்பாடாகும்.

பல்வேறு நெருக்கடிகள், சவால்களுக்கு மத்தியிலும் அரசு பெற்றுக் கொடுத்துள்ள ஒத்துழைப்புப் காரணமாக நாட்டின் விவசாயத்துறை சிறப்பாக முன்னேற்றமடைந்துள்ளது. அதற்கான திட்டங்களை மேலும் சாத்தியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடன் தொடர்பான நம்பிக்கையை மீள ஸ்தாபிப்பது தொடர்பில் இந்தக் காலகட்டங்களில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதற்கு சீனா, ஜப்பான், அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்புக்களும் கிடைக்கின்றன.

சர்வதேச நாணயத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் சாத்தியமாகா என எதிர்க்கட்சி தெரிவித்து வந்த நிலையில், அவர்களது கூற்றை இப்போது அவர்களே விழுங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப எதிர்க்கட்சியினர் வெறும் வாய்வீச்சை மட்டுமே வெளிப்படுத்தி வருகின்றனர்.

விமர்சிப்பதில் காலம் கடத்துகின்றனரே தவிர எந்த உருப்படியான வேலைத்திட்டமும் அவர்களிடம் கிடையாது. அதனால் நாட்டின் பொருளாதார நிலைமையை உணர்ந்து இந்த ஆட்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதே எதிர்க்கட்சியின் செயற்பாடாக இருக்க வேண்டும். – என்றார்.

# சுழலில் மீண்டும் சுருண்டது ஆஸி.

# இந்திய முதல் டெஸ்டை வென்று அபாரம்




அஸ்வினின் அபார பந்துவீச்சின் துணையுடன் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றி பெற்றது.

இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நாக்பூரில் விறுவிறுப்பாக நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 177 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதனையடுத்து களமிறங்கிய இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 400 ஓட்டங்களை குவித்தது.

இதன் மூலம் 223 ஓட்டங்கள் இந்தியா முன்னிலையில் இருந்தது. இதையடுத்து, முதல் டெஸ்ட் போட்டியின் 3ஆவது நாளான இன்று களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கு உஸ்மான் கவாஜா, டேவிட் வார்னர் இணை தொடக்கம் கொடுத்தது. இந்த இணையை இரண்டாவது ஓவரிலேயே அஸ்வின் பிரித்து, கவாஜாவை ஓய்வுக்கு அனுப்பினார். அடுத்து வந்த மார்னஸ் லாபுசாக்னேவை 11ஆவது ஓவரில் ஜடேஜா வெளியேற்ற 11 ஓவர்கள் முடிவில் ஆஸ்திரேலியா 2 விக்கெட்டுகளை இழந்து 26 ஓட்டங்களை மட்டுமே சேர்த்திருந்தது.

தொடர்ந்து அஸ்வின் சுழல் வேட்டையில் இறங்க, டேவிட் வார்னர் 10 ஓட்டங்களிலும், மாட் ரென்ா 2 ஓட்டங்களிலும் நடையைக் கட்டினர். தொடர்ந்து பீட்டர் ஹேண்ட்ஸ் கோம்ப்பை (6) எல்பிடபிள்யூ முறையில் வெளியேற ஆஸ்திரேலிய துடுப்பாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தார் அஸ்வின். அவர் 12 ஓவர்கள் பந்துவிசி 37 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை வீழ்த்தினார். ஜடேஜா மற்றும் சமி தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

இந்திய அணித் தலைவர் வேகப் பந்துவீச்சாளர்களை அதிகம் பயன்படுத்தாது தொடக்கம் முதலே சுழல் பந்து வீச்சாளர்களைக்கொண்டுவந்து ஆஸ்திரேலிய அணிக்கு கிலியை ஏற்படுத்திவிட்டார்.

## விறுவிறுப்பான ஆட்டத்தில் தெ.ஆபிரிக்காவை வீழ்த்தி இலங்கைப் பெண்கள் அணி அசத்தல்



*சர்வதேச கிரிக்கெட் சபை நடத்தும் மகளிர் ரி20 கிரிக்கெட் தொடர் நேற்றிரவு தென்னாபிரிக்காவுன் கேப்டவுணில் தொடங்கியது. முதல் ஆட்டத்திலேயே இலங்கை அணி விறுவிறுப்பான வெற்றியைப் பதிவு செய்து அசத்தியுள்ளது.*

*ஐசிசி தரவரிசையில் 9 ஆவது இடத்தில் இருக்கும் இலங்கை அணி தரவரிசையில் முன்னணியில் இருக்கும் தென்னாபிரிக்காவை, அதன் சொந்த மண்ணில் முதல் ஆட்டத்திலேயே தோற்றகடித்தமை பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி விறுவிறுப்பான வெற்றியைப் பதிவு செய்தது.*

*தென் ஆபிரிக்காவுக்கு எதிரான சர்வதேச இருபது 20 போட்டி ஒன்றில் 2016க்குப் பின்னர் இலங்கை ஈட்டிய முதலாவது வெற்றி இதுவாகும்.*

*அணித் தலைவி சமரி அத்தபத்து மிகவும் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 50 பந்துகளில் 68 ஓட்டங்களைப் பெற்று இலங்கையின் வெற்றிக்கு அடிகோலியிருந்தார். இதன் மூலம் மகளிர் இருபது 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை சார்பாக அதிகூடிய தனிநபருக்கான ஓட்ட எண்ணிக்கையை சமரி அத்தபத்து பதிவு செய்தார்.*

*சமரி அத்தப்பத்துவைத் தொடர்ந்து இனோக்கா ரணவீர, சுகந்திகா குமாரி, ஓாதி ரணசிங்க ஆகியோர் துல்லிய மாகப் பந்துவீசி தென் ஆபிரிக்காவின் பலம்வாய்ந்த துடுப்பாட்ட வரிசையைக் கட்டுப்படுத்தினர்.*

*அப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இலங்கை நிதானத்துடன் துடுப்பாட்டத்தைத் தொடங்கியது. 20 ஓவர்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது.*

*முதல் 3 ஓவர்களில் 4 ஓட்டங்களை மாத்திரமே இலங்கை பெற்றிருந்தது. ஆனால், சிறுக சிறுக வேகமாக ஓட்டங்களைப் பெறத் தொடங்கிய அத்தபத்து, அணி நல்ல நிலையை அடைய உதவினார்.*

*மொத்த எண்ணிக்கை 28 ஓட்டங்களாக இருந்தபோது அத்தபத்துவின் சக தொடக்க வீராங்கனை ஹர்ஷித்தா சமரவிக்ரம 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். (28 - 1 விக்.)*

*அதன் பின்னர் அத்தபத்துவுடன் ஜோடி சேர்ந்த 19 வயதுக்குட்பட்ட இலங்கை அணித் தலைவி விஷ்மி குணரட்ன திறமையாகத் துடுப்பெடுத்தாடி 4 பவுண்டறிளுடன் 35 ஓட்டங்களைப் பெற்றதுடன் 2ஆவது விக்கெட்டில் பெறுமதிமிக்க 94 ஓட்டங்களைப் பகிர்ந்தார். சமரி அத்தபத்து 12 பவுண்டறிகள் அடங்கலாக 68 ஓட்டங்களைப் பெற்றார்.*

*தென் ஆபிரிக்க பந்துவீச்சில் மாரிஸ்ஆன் கெப், ப்மின் இஸ்மாயில், நாடின் டி க்ளார்க் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.*

*சுமாரான 130 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்கா 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.*

*துடுப்பாட்டத்தில் அணித் தலைவி சுனே லுஸ் 28 ஓட்டங்களையும் லோரா வுல்வார்ட் 18 ஓட்டங்களையும் சினாலோ ஜவ்டா 15 ஓட்டங்களையும் பெற்றனர்.*

*இலங்கை பந்துவீச்சில் இனோக்கா ரணவீர 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ஓதி ரணசிங்க 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் சுகந்திகா ரணசிங்க 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். ஆட்டநாயகியாக சமரி அத்தபத்து அறிவிக்கப்பட்டார்.*



## கும்ளேயின் சாதனையை சமன்செய்த அஸ்வின்

சொந்த மண்ணில் அதிகமுறை 5 விக்கெட்டுகள் எடுத்த வீரர்களின் பட்டியலில் 3ஆம் இடம் பிடித்துள்ளார் இந்தியச் சுழற்பந்து வீச்சாளர் ஆர்.அஸ்வின்.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து 4 டெஸ்டுகள், 3 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடுகிறது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது இந்திய அணி. 2அவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளைவீழ்த்தினார் அஸ்வின்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தியாவில் 25 முறை 5 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் அஸ்வின். இதன் மூலம் இதே இலக்கைத் தொட்ட கும்ப்ளேவின் சாதனையைச் சமன் செய்துள்ளார். கும்ப்ளே 115 இன்னிங்ஸிலும் அஸ்வின் 101 இன்னிங்ஸிலும் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்கள். சொந்த மண்ணில் அதிகமுறை 5 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள் பட்டியலில முரளிதரன் (45), கேரத் (26) ஆகியோர் முதலிரு இடங்களில் உள்ளனர்.

# இள வயது பட்டதாரிகளுக்கே ஆசிரியர் நியமனம் வழங்குக!

## வேலையற்ற பட்டதாரிகள் சங்க பிரதிநிதிகள் கோரிக்கை

ஆசிரிய நியமனத்தை வேலையற்ற பட்டதாரிகளான இளம் பட்டதாரிகளுக்கு வழங்க வேண்டும் என வேலையற்ற பட்டதாரிகள் சங்க பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்திப்பின்போதே இவ்வாறு வலியுறுத்தினர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வேலையில்லாப் பட்டதாரிகள் அமைப்பின் ஊடாக அறியத் தருவது யாதெனில், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் விளைவாக, நாட்டை அபிவிருத்தி அடையச்செய்யும் பட்டதாரிகளுக்கு சவால் உருவாகியுள்ளது.

அரசாங்கம் பட்டதாரிகளுக்கு நியமனங்களைஇரத்துசெய்துள்ளது, தனியார் நிறுவனங்கள் பட்டதாரிகளை நிராகரித்து வருகின்றன.

சுயதொழிலை உருவாக்குவதற்கான முதலீடுகள் இன்றிவங்கிகளில் வட்டிக்குப்பணம்பெற்றுசுயதொழிலை உருவாக்கவும் முடியவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் எமது சமுதாயத்தின் வரிப்பணத்தில் கல்விகற்றநாம்சமுதாயநலனுக்காக செயற்படாமல் இருப்பது எமக்கு குற்ற உணர்வைத் தருவதோடு, பெற்றவர்களுக்கும், சகோதரர்களுக்கும் உரிய கடமைகளை நிறைவேற்ற முடியாமலும் எமது எதிர்காலத்துக்கான சேமிப்பையோ வாழ்க்கையைத் தொடங்குவதற்கான திட்டமிடலையோ உருவாக்க முடியாத சூழலிலும் தள்ளப்பட்டுள்ளோம்.




எமது எதிர்காலம் தொடர்பில் கேள்வியையும் அதன்வழியே,விரக்தியையும்கொண்டிருப்பது பெரும் மன வேதனையைத்தருகின்றது.

ஆகவே, எமக்கான எதிர்காலம் மீட்சி பெறாதா? எனும் கவலையோடு, அரசாங்கம் எதிர்க்கொண்டுள்ள பிரச்சனைகளை அறிந்தும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் சூழ்நிலைக்கு வந்துள்ளோம்.

நாம் அரசாங்கத்தால் கொடுக்கப்படவிருக்கும் ஆசிரிய நியமனத்துக்கு பட்டதாரிகள் தேர்வு இடம் பெற இருப்பதை நன்கு அறிவோம். ஆகவே, இளம் பட்டதாரிகளாகிய எங்களின் மீது அக்கறை செலுத்தும் கடமையும் பொறுப்பும் உங்களுக்கு இருக்குமென்பதையும் நாம் உணர்கின்றோம்.

1.பொருத்தமான பட்டதாரிகளை பொருத்தமான ஆசிரியர் நியமனங்களுக்கு உள்வாங்க வேண்டும்.

2. முப்பத்தி ஐந்து வயதுக்கு உட்பட்டவர்களை ஆசிரியர் நியமனத்துக்கு உள்வாங்க வேண்டும்.

3. ஓய்வூதியத்துக்கு உரிய வயதை அண்ணளவாக குறைத்தல் வேண்டும்.

4. தகுதிவாய்ந்த ஆசிரியர்களை சேவையில்இணைத்துக்கொண்டதன் பின்னர் பாடங்களுக்கான பற்றாக்குறை ஏற்படும் இடத்தில் தகுதி வாய்ந்த பட்டதாரிகளை பாட ரீதியாக வெளியிலிருந்து இணைத்துக் கொள்ள வேண்டும்.

05.யாழ்ப்பாணத்தில் திறக்கப்படும் இந்திய நிதி திட்டத்தில் உருவான கலாசார மண்டபத்துக்கான பணியாளர்களாக, தகுதியான பட்டதாரிகளையே உள்வாங்க வேண்டும்.

06.யாழ்ப்பாணத்தில் உருவாகும் நகரசபை மண்டபத்துக்கும் உரிய பட்டதாரிகளை உள் சேர்க்கவேண்டும்.

07.காங்கேசன் துறையில் உருவாகவிருக்கும்இந்திய இலங்கை கடல்வளி வர்த்தக மையத்தின் முக்கியமான பணிக்கு தகுதியான பட்டதாரிகளையே உள் சேர்க்க வேண்டும். மேற்கூறிய அனைத்தையும் நிவர்த்தி செய்வதினூடாக எமக்கான வேலைவாய்ப்பை உருவாக்க முடியு மென எதிர்பார்க்கின்றோம்.

ஆகவே, எமது எதிர்காலத்தின் மேல் கரிசனை கொண்டு எமது கோரிக்கைகளை பரிசீலித்து ஒரு திடமான தீர்வை பெற்றுத்தருவீர்கள் என நம்புகின்றோம். – எனத் தெரிவித்தனர்.

## யாழ்ப்பாண கலாசார.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய இணை அமைச்சர் கலாநிதி எல்.முருகன், அமைச்சர்கள் விதுர விக்கரமநாயக்க, டக்ளஸ் தேவானந்தா, இந்திய ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு தலைவர் கு.அண்ணாமலை ஆகியோர் முன்னிலையில் கலாசார நிலையம் மக்கள் உரித்தாக்கப்பட்டது.

இந்தக் கட்டடம் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையமாக விளங்கவேண்டும். இதற்கு 'சரஸ்வதி மண்டபம்' எனப் பெயர் சூட்ட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு தனது உரையில் குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையின் அபிவிருத்தி குறித்தும் இந்தியாவுடன் பேச்சு நடத்தியுள்ளோம். இந்த காலாசார மையமானது பொதுவான கலாசார மையமாகவே இருகின்றது. இந்திய இலங்கை உறவு என்பது ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றது.

தமிழ் மக்களின் சுதந்திரத்தை மையப்படுத்தியே 75ஆவது சுதந்திர தின நிழ்வை ஏற்பாடு செய்துள்ளோம். அதில் ஒரு அங்கமே இந்த காலாசார மையத்தை மக்களுக்கும் வழங்கும் நிகழ்வும்.

யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் முன்னெடுத்த வேலைத்திட்டத்தை மையப்படுத்தியே கிக்கடுவையிலுள்ள பௌத்த தேரரும் அதனை முன்னெடுத்திருந்தார்.

ஆறுமுகநாவலர் முன்னெடுத்திருந்த பணிகளில் இருந்துதான் சிங்கள தலைமைத்துவமும் உருவாகியது.

இந்தக் கலாசார மண்டபம் என்பது அனைவருக்கும் பொதுவான ஒன்று. தமிழ் மக்களின் கலாசார மத்திய நிலையமாக இது விளங்கவேண்டும். இதற்கு 'சரஸ்வதி மண்டபம்'எனப்பெயர்சூட்ட வேண்டுகோள்விடுக்கின்றேன். ஒரு நாணயத்தின் இரு முகங்கள் போன்று இலங்கை – இந்திய கலாசார இணைப்பு எப்போதும் பிரிக்க முடியாததாக இருக்கும் – என்றார்.

இந்திய இணை அமைச்சர் எல். முருகன் தனது உரையில் தெரிவித்ததாவது:

இந்தியப் பிரதமரின் வழிகாட்டலுக்கு அமைவாக வடக்கு மாகாணத்திலுள்ள பின் தங்கிய 100 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம் ஒன்றையும் தொடங்கவுள்ளோம். வாழ்நாள் முழுவதும் அழியாமல் துணை நிற்பது கல்வி ஒன்று மட்டுமே செல்வமோ அல்லது நண்பர்களோ என்றும் நிலையானது இல்லை.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் 'அயல் நாட்டுக்கு முதலிடம்' கொள்கையின் கீழ் இலங்கை முக்கியத்துவம் பெறுவது இயற்கையானது. 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்ற திருக்குறளுக்கமைய நட்பு நாடாக இந்தியா கடந்த 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் சுமார் 4 பில்லியன் டொலர் கடன் உள்ளிட்ட ஏனைய உதவிகளை வழங்கியுள்ளது.

இலங்கையின்பொருளாதார முயற்சிக்குவழிவகுக்கும் வகையில் சர்வதேச நாணய நிதியத்திற்கு எழுத்து மூலமாக நிதி உத்தரவாதத்தை வழங்கிய முதல் நாடு இந்தியா என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். கொவிட் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளிலும் இந்தியா அதன் உதவிகளை முன்னின்று வழங்கியுள்ளது.

இவ்வழியாக இரு நாட்டு தலைமைகளினதும் வழிகாட்டலில் எமது ஒத்துழைப்புக்களை மேலும் விரிவுபடுத்துவோம் என்று உறுதியளிக்கின்றேன்.

யாழ் – சென்னை நேரடி விமான சேவை இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக பரிமாற்றங்களை விரைவுபடுத்தும்.

அது வர்த்தகம் மாத்திரமின்றி சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் இது உந்துகோலாக அமையும். அதேபோன்று உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல் உட்பட இரு நாடுகளுக்குமிடையிலான படகு சேவையை புதுப்பிக்கவும் நாம் பணியாற்றி வருகின்றோம். இது எம்மிரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தி பொருளாதார, கலாசார ஈடுபாடுகளை ஆழப்படுத்தும் என்பதை உறுதியாக நம்புகின்றோம்.

அபிவிருத்தி குறிக்கோளுடன் இலங்கையும் பயணித்துக் கொண்டிருக்கிறது. அத்தகைய அபிவிருத்தி பயணத்தில் இந்தியா தனது நட்பு நாடுகளை குறிப்பாக இலங்கையையும் அரவணைத்து முன்னேற்றிச் செல்லும் என்று உறுதியளிக்கின்றோம்.

இவ்வளர்ச்சி இரு நாடுகளுக்குமானதாக மாத்திரமின்றிமக்களுக்கானதாகவும்இருக்கும்என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

# ஜனாதிபதி ரணில் ஜே.ஆரின் மருகனா?

## விமல் வீரவன்ஸவுக்கு வந்த சந்தேகம்

இந்தியாவின் கடும் அழுத்தத்தால் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தாமல் இருக்க போட்ட முடிச்சுக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவிழ்க்க முயற்சிக்கிறார்.



ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க ஜே.ஆர். ஜயவர்தனவின் மருமகனா என்பதை அவரது குடும்பத்தினர் ஆராய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

13 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்ய தனிநபர் பிரேரணையை கொண்டு வர வேண்டிய தேவை கிடையாது. 13 ஆவது திருத்தம், மாகாண சபை முறைமை ஒன்றாக இயற்றப்பட்டதால் சட்ட சிக்கல் காணப்படுகிறது.

ஆகவே, அரசாங்கம் நாடாளுமன்றத்துக்கு வெளியீட்டு சட்ட மூலத்தை கொண்டுவந்து 13 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்யலாம். 13 ஆவது திருத்தத்தை எந்தக் காலமும் முழுமையாக அமுல்படுத்த இடமளிக்கப்போவதில்லை என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைத் தவிர்த்து 13 ஆவது திருத்தத்தின் ஏனைய அதிகாரங்கள் தற்போதும் அமுலில் உள்ளன.

35 ஆண்டு காலமாக கிடப்பில் இருந்த 13 ஆவது திருத்தத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது உயிர்ப்பிக்க முயற்சிக்கிறார். தேவையில்லாத விடயங்களை செயற்படுத்த முயற்சித்தால் நாட்டில் பிரச்சினைகள் தான் தோற்றம் பெறும்.

பொருளாதாரப் பாதிப்பை முன்னிலைப்படுத்தி தற்போது நாட்டுக்கு எதிராக பல தீய சக்திகள் அரச ஆதரவுடன் செயற்படுகின்றன.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் தீர்க்கமான பேச்சுகளில் ஈடுப்பட்டுள்ளார். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் இந்தியாவால் பலவந்தமாக இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தினால் இலங்கை இயல்பாகவே சமஷ்டி முறையிலான நாடாக அங்கீகரிக்கப்படும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் இலங்கை மீது கட்டப்பட்ட கூர்மையான கத்திகளை போல் உள்ளது இந்தக் கத்திகள் அரசமைப்பு திருத்தம் என்ற கயிற்றால் கட்டப்பட்டுள்ளதாக 13 ஆவது திருத்தம் தொடர்பில் தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

நாட்டின் சுயாதீனத்துக்கு பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதற்காகவே அரசமைப்பின் ஊடாக ஒருசில தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தடைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தகர்க்க முயற்சிக்கிறார். 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப் பட் டால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சாதி அடிப்படையில் தமிழ் மக்கள் மத்தியில் முரண்பாடுகள் தோற்றம் பெறும்.

வடக்கு மற்றும் கிழக்கில் வேளாளர் சாதியினர் பொலிஸ் அதிகாரத்தை முழுமையாக ஆக்கிரமித்து கீழ் சாதியினரை அடிமைபோல் செயற்படுத்துவார்கள்.

வடக்கு மாகாணத்தில் இன்றும் சாதி அடிப்படையிலான வேறுபாடுகள் புரையோடி போயுள்ளன. 13 ஆவது திருத்தம் ஊடாக நாட்டில் இல்லாத பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உயிர் கொடுக்க முயற்சிக்கிறார்.

1987 ஆம் ஆண்டு முதல் மக்களாணையுடன் ஆட்சிக்கு வந்த அரச தலைவர்கள் எவரும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை.

ஆனால் மக்களாணை இல்லாமல் மக்களால் வெறுக்கப்படும் – 134 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த அதிகாரம் இல்லை. இந்தியாவின் கடும் அழுத்தத்தின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன அரசமைப் பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தினார்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தினால் ஏற்படும் விளைவுகளை தடுக்க அவர் அரசமைப்பின் ஊடாக ஒரு சில முடிச்சுக்களை போட்டார்.

அந்த முடிச்சுக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவிழ்க்க முயற்சிக்கிறார். ஆகவே இவர் ஜே.ஆர்.ஜயவர்தனவின் மருமகனா என்பதை அவரது குடும்பத்தார் ஆராய வேண்டும்.

சமஷ்டியாட்சி மற்றும் சுயநிர்ணயம் ஊடாக தேசிய நல்லிணக்கம் ஒருபோதும் தோற்றம் பெறாது, இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் மாத்திரம் தோற்றம் பெறும்.

ஆகவே, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு எக்காரணிகளுக்காகவும் இடமளிக்கப் போவதில்லை என்பதில் எவ்வித மாற்றமுமில்லை. தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம். – என்றார்.

## முதல் 'டியூட்டி பிரீ' .....

அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி அப்போது தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், பலாலி விமானத்தின்ஊடாக பயணிக்கும் பயணிகளுக்காக மேலும் பல வசதிகள் ஏற்படுத்தப்படும் என்றார்.

"தற்போது வாரத்துக்கு நான்கு விமான சேவைகள் மாத்திரமே இடம்பெறுகின்றன. அதனை ஏழு சேவைகளாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். அதேபோல இரத்மலானை பலாலிக்கு இடையில் உள்ளூர் விமான சேவையினையும் விரைவில் தொடங்கவுள்ளோம்.

பலாலி விமான நிலையத்தினை விரிவாக்கி இங்கே பயணிக்கும் பயணிகளுக்கும் மேலும் பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நாங்கள் முயற்சிகளை எடுத்துள்ளோம்.

வர்த்தக ரீதியில் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இன்று முதலாவது தீர்வையற்ற கடை திறக்கப்பட்டுள்ளது அதேபோல மேலும் பல கடைகளைத் திறப்பதற்கும் எதிர்பார்த்திருக்கின்றோம்.

அதில் அழகு சாதன பொருட்கள் உள்ளிட்ட பல பொருட்கள் அடங்கிய தீர்வையற்ற கடைகள் இங்கே திறக்கப்படவுள்ளன. தீர்வையற்ற கடைகளுக்காக ஒரு தனியான கட்டட தொகுதியினை அமைக்கவுள்ளோம் அதேபோல் விமானத்திற்குள் உள்நுழையும் வெளியேறும் பாதைகள் விரிவாக்கப்பட்டு பயணிகள் சௌகரியமாக பயணிக்கக்கூடிய ஏற்பாடுகளும் செய்யப்படவுள்ளன –என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.02.2023 இல் வெளியிடப்பெற்றது.